நவசக்தி
சிலம்பு 7, பரல் 38
July 13, 1927

Record no. 2305

Navacakti

Cilampu 7, paral 38

July 13, 1927

Record no. 2305

Registered No.

நவசக்தி

சந்தா விவரம்	ரூ. அ.
வருட சந்தா	5 0
ஆறுமாத சந்தா	3 0
வெளிநாடு-வருட சந்தா ...	6 0

வாரப்பதிப்பு

"எவ்வுயிர்க்கும் அன்பாயிரு"

விளம்பர விகிதம்	
பத்தி 1-க்கு வாரம் 1-க்கு ரூபா	7 0
சில்லரை விளம்பரம் 1 அங்.	0 8
முன்பணமின்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.	

சிலம்பு எ — பிரபவஹு ஆனிமீ உகூஉ (13—7—27) புதன்கிழமை — பரல் உஅ

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை" என்னும் நூலில் "பெண்ணின் முதன்மை" என்னும் இரண்டாம் அதிகாரத்துள் ஒரு பகுதி வருமாறு :—

"பெண்ணின் முதன்மை"

* * * பெண்மை யாவது யாது? அடக்கம் பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று. மண் நீர் காற்று ஒளி முதலியன சேர்ந்து மரமாதல் போல அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. சிறு சிறு நீர்த்துளி சேர்ந்து பரந்த நீர்நிலை யென்னும் பெயர் பெறுதல் போலவும், சிறு சிறு பரல்கள் சேர்ந்து மலையென்னும் பெயர் பெறுதல் போலவும் அடக்கம் முதலிய குணங்கள் ஒன்றி அவை பெண்மை என்னும் பெயர் பெற்றன. பெண்மை என்பதைக் கூறிட்டுப் பார்ப்பின் அஃது அடக்கம் முதலிய நீர்மைகளாகப் பிரிந்து நிற்கும். அடக்கம் முதலிய இயல்புகளின் திரட்சி பெண்மை என்பது கவனிக்கற்பாற்று.

* * *

உலகில் இன்பம் துன்பம் என்னும் இரண்டுமுண்டு. இன்பம் எப்பொழுது நிகழ்கிறது? துன்பம் எப்பொழுது விளைகிறது? அடக்கம் பொறுமை தியாகம் இரக்கம் முதலியவாற்றால் இன்பமெழுதலும், அடங்காமை பொறாமை தன்னலம் அவா வன்கண் முதலியவாற்றால் துன்பமுறுதலுங் கண்கூடு. மாயை அவித்தை முதலியவற்றைக் கடந்து விளங்குவது இன்பமென்றும், அம்மாயையாதியன பொறாமை வெகுளி அவா முதலிய பேய்க்குணங்களாகக் காரியப்பட்டு உயிர்களைப் பிடித்து இன்ப ஊற்றைத் தகைந்து கொண்டிருக்கின்றன என்றும் ஞான நூல்கள் நவில்கின்றன. இப்பேய்க்குணங்களல்லாத அடக்கம் பொறுமை முதலிய தெய்வகுணங்களால் விளைவது இன்பமென்பது அன்றுட அனுபவத்தில் அறியக் கிடப்பது.

* * *

அடக்கம் முதலியவற்றின் திரட்சி பெண்மையாய்ப் பொலிவதையும், அடக்கம் முதலியவாற்றால் இன்பம் விளைவதையுங் கூர்ந்து நோக்கின் பெண்மை இன்பமாக விளங்காமற் போகாது. ஆகவே பெண்மையை இன்பநிலையாகக் கோடல் எவ்வாற்றானும் பொருந்தும், மின்சாரம் யாண்டும் இயங்கினும், அது யாண்டும் விளங்கித் தோன்றுது, அதனை விளங்கித் தோன்றுமாறு தொழிற்படுத்துமிடத்தில் மட்டும் அஃது ஒளிர்தல்போல இன்பம் யாண்டும் பரந்து நிற்பினும் அது பெண்மையில் விளங்கி நிகழ்ச்சியில் உணர்த்துமென்க.

* * *

இனிப் பெண்மையாவது யாது? இன்ப நிலை என்று சொல்லலாமன்றே? அடக்கம் பொறுமை தியாகம் முதலியன பெண்மையின் உறுப்புக்கள். அவ்வுறுப்புக்கள் சேர்ந்த இன்பம் பெண்மையின் உடல். அவ்வின்ப உடல் நுண்ணியதாகலின் (Abstract) அதற்கு என்பு தோல் போர்த்த ஒரு பருவுடல் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வடிவம் பெண் என்னும் பெயரால் உலகில் வழங்கப்பட்டு வருகிறது. இப்பொழுது பெண் எது? இன்பத்தின் பருமை.

* * *

இன்பமோ நுண்ணியது; காணக்கூடாதது. காணக்கூடாத இன்பம் பெண்ணாகி நமக்குக் காட்சி யளிக்கிறது. பெண்மையெனும் இன்பத் தெய்வத்தை ஏந்திநிற்கும் பெண்ணை வெறும் பெண்ணெனக்கொள்ளாது பெண் தெய்வமென்றும் போற்றலாம். இத்தகைப் பெண்மையுடைய பெண்ணை முதன்மையுடையாள் எனில் என்ன முழுகிப்போகும்?

* * *

பெண்மை இன்பமாயின் பெண்மை அழகுமாகும். இன்பமுள்ள விடத்தில் அழகுமுண்டு. அழகுள்ள விடத்தில் இன்பமுமுண்டு. அழகு புலனுகுமிடத்தில் இன்ப நுகர்ச்சியுமிருத்தல் அநுபவம். ஆதலால் பெண்மை அழகுமாதல் கவனிக்கத்தக்கது.

* * *

அழகு நுட்பம் உணர்ந்த மக்களுள் பண்டைத் தமிழ்மக்கள் தலைசிறந்து விளங்கினவர்கள். அவர்கள் பெண்ணை அழகென்றே கொண்டார்கள். பெண்ணெனுந் தமிழ்ச் சொற்கு அழகு என்பது பொருள். பெண்ணைக் குறிக்கும் மாதர் முதலிய சொற்கட்கும் அழகுப் பொருளிருத்தல் காண்க. பெண் மாதர் இவைகள் ஆகுபெயர்கள். பல விடங்களில் ஒரோவழி விளங்கும் அழகெலாந் திரண்டு பெண்ணாகி நிற்றலால் அழகுப் பொருள் அளிக்கும் பெண்ணெனுஞ் சொல் பெண்ணுலகிற்குச் சூட்டப்பட்டது. நீலவானத்தில் திங்கள் போலவும், மலையில் பொழில் போலவும், பசுங்கொடியில் மலர்போலவும், மலரில் நிறம் போலவும், பறவைகளில் மயில் போலவும், விலங்குகளில் மான்போலவும் பெண்ணெனும் அழகு இவ்வழகிய உலகை அழகு செய்கிறது. பெண்ணில்லையேல் உலகில் அழகேது?

* * *

அழகு எது? இது குறித்து "முருகன்" என்னும் நூலில் எழுதியிருக்கிறேன். அழகுக் கடவுளைக் கண்டின்புற எவரும் வானத்தை நோக்க வேண்டுவதில்லை; மலைக்கேக வேண்டுவதில்லை; காடுகளில் புகவேண்டுவதில்லை; கடலை நாடவேண்டுவதில்லை; காவியங்களைப் புரட்ட வேண்டுவதில்லை. அழகுக் கடவுள் பெண்ணாகி யாண்டுங் காட்சியளிக்கிறது, கண்ணுளோர் காண்பாராக.

* * *

பெண்ணழகிலுள்ள கடவுட்டன்மையுணர்ந்து அவ்வழகை எத்தனைக் கவிவாணர் எழுத்தால் எழுதி எழுதி இன்பம் நுகர்ந்தார்! அன்னார் எழுதி எழுதி எழுத்துக்கு முடிவு கண்டாரன்றி அவ்வழகுக்கு முடிவு கண்டாரில்லை. அழகுக் கடவுளுக்கு முடிவேது? அழிவேது? பெண்ணின்பாலுள்ள அழகுக் கடவுளைக் காணாது என்பு தோல்மீது கருத்துக்கொண்டழியும் தூர்த்தர் நிலைகுறித்து இரங்குகிறேன். எல்லாவற்றிலும் முதன்மை பெற்றுள்ள அழகாகிய பெண்ணிற்கு முதன்மை குறித்தல் தவறுமோ?

* * *

பெண்ணின் வாழ்க்கையை ஊன்றிக் கவனிப்போமாயின், பெண் பிறவியின் விழுமிய நோக்கம் இனிது புலனாகும். பெண் பிறவி காமவேட்கைக்கும், அடுப்பூதல் முதலிய வேலைகட்கும் என்றுகோடல் அறியாமை. இவ்வுலக ஆக்கமும் அழிவும் பெண்ணிடத்திருக்கின்றன. பெண் தன் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளைத் தீயவழியில் வளர்த்து உலகில் விடின் உலகில் அரக்கர் வாழ்வு பெருகித் தெய்வ அன்பு வாழ்வு சுருங்கி அழிந்துபடும். பெண்ணினல்லாள் தெய்வமாகலின் எப்பொழுதும் அழிவு நினையாள். அவள் உள்ளத்துள் எப்பொழுதும் ஆக்கமே நிலவும். தன்வயிற்றிற் பிறக்கும் பிள்ளை, பெருங்கல்வியாளனாய், வீரனாய், அன்பனாய், நல்லனாய் உலகில் வாழல் வேண்டும் என்னும் எண்ணத்தையே தாய் கொள்வது வழக்கம். பிள்ளை கெட்டொழிய வேண்டுமென்று தாய் ஒருபோதும் நினையாள். தாய்வயிற்றிற் பிறந்து அவளால் வளர்க்கப் பெறும் பிள்ளைகளல்லவோ பின்னையுலகம்? எனவே உலகம் யாரிடத்திருக்கிறது? தாயினிடத்தன்றோ? அவ்வுலகாக்கும் தாய்மையுடைய பெண்ணின் பெருமையை என்னென்று கூறுவது? அன்பர்களே! பெண் பிறவியின் விழுப்பத்தைக் கூர்ந்து நோக்குங்கள். பெண்ணின் பெருமை யுணர்ந்தன்றோ திருவள்ளுவனார் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று உலகிற்கு அறிவுறுத்தினர்?

* * *

இவ்வுலக ஆக்கத்துக்குரிய தாய்மை பெண்ணின் பாலுண்டெனில் அவளது தொண்டின் சிறப்பை என்னென்று கூறுவேன்? இவ்வுலக நலத்துக்குரிய தொண்டை (Service) அத்தெய்வம் ஏந்தி நிற்கிறது. பயன் கருதிச்செய்யும் வேலை தொண்டாகாது. பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும். பிள்ளைகளை நல்வழியில் வளர்க்குந் தொண்டினுஞ் சிறந்த தொண்டு வேறொன்றுண்டோ? பிள்ளைகளுக்குத் தொண்டும் செய்யும் போது தாய் ஏதாவது பயன் கருதுகிறாளா? இல்லையே. உலக நலன் ஒன்றே கருதித் தாய்தொண்டு செய்கிறாள். பயன் கருதாத் தொண்டன்றோ கடவுள் தொண்டு? அத்தொண்ட ருளத்தன்றோ கடவுள் வீற்றிருப்பார்? தாயுள்ளத்திலில்லாத கடவுளெங்கே யிருக்கப்போகிறார்? அதுபற்றியே "ஈன்றாளின் என்ன கடவுளுமில்" என்றார் நான்மணிக்கடிகைக் காரர். பெண் தாயாய்ப் புரியுந்தொண்டு பெரிதுங் கவனிக்கற்பாலது. பெண் பிறவியின் விழுமிய நோக்கம் தாயாகித் தொண்டு புரிதல் என்று சொல்லல் மிகையாகாது. எனவே பெண்மை என்னும் நினைவு தோன்றும்போது தாய்மை, தொண்டு என்னும் இரண்டும் பக்கத்தில் தோற்றமுறல் வேண்டும். இத்தாய்மையுந் தொண்டும் வாய்ந்த பெண்ணல்லளோ முதன்மையுடையாள்?

* * *

தாய்மைத் தொண்டு என்பது எளியதன்று. தாய்மைத் தொண்டு என்று எளிதில் பேசலாம்; எழுதலாம். நடைமுறையில் அத்தொண்டாற்றுவோர்க்கு அதன் அருமை தெரியும். அவ்வரிய தொண்டு பெண்ணிற்கு வாழ்வாயிருக்கிறது. அத்தொண்டிற்கென்றே பெண் பிறந்தாள்; வளர்ந்தாள்; படித்தாள்; மணங்கொண்டாள்; வாழ்கிறாள் என்றுங் கூறலாம். தொண்டு அடிமை வேலையன்று. பயன் கருதாத்தொண்டு தெய்விகம் நிரம்பியது. "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னுந் திருவாக்கை யோர்க. இப்பெயரான் யான் ஒரு நூல் எழுதியிருக்கிறேன். விரைவு அதிற் காண்க.

* * *

வாழ்க்கையில் தலைப்பட்டுள்ள ஒரு பெண்ணின் வாழ்வை நோக்கின், அவளது தொண்டின் சிறப்பு இனிது புலனாகும். அப்பெண் எத்துணை எத்துணைத்தொண்டாற்றுகிறாள்! மாமன் முதலியோர்க்கேற்ற தொண்டு-கணவனுக்குரிய தொண்டு-பிள்ளைகளுக் குகந்ததொண்டு-மற்றவர்கட்குத் தக்க தொண்டு-எத்தனை எத்தனை வகைத் தொண்டு! வன்கண்ணர் சேர்ந்த குடும்பமாயின், அக்குடும்ப நெருப்பிடை நின்று, துன்பம் பொறுத்து, மகிழ்ச்சியோடு பெண் பணியாற்றுகிறாள். வருவாயில்லாக் குடும்பமாயின் பொருளீட்டுந் துறையிலும் உழைத்து மற்றக்கடன்களைப் பெண் உகுற்றுகிறாள். பொது வினைகளில் தலைப்படுவோரின் அவ்வினைகளையும் பெண்மகள் நிகழ்த்துகிறாள். பெண்மகள் துன்பம் பொறுத்து மகிழ்ச்சியோடு பணிசெய்தல் போல் ஆண்மகன் செய்யமாட்டான்.

* * *

பொறுமைப் பொருளாய பெண்ணைக் கிறிஸ்து என்றுங் காந்தி என்றும் நான் போற்றுகிறேன். துன்பப் பொறையில் விளைவது இன்பம் என்று ஆஸ்கார் ஒயில்ட் என்னும் அறிஞர் கூறிப்போந்தார். இவ்வின்ப நிலை பெற்றவரல்லரோ என்னையும் அன்பால் பிறர்க்களிப்பவராவர்? இந்நிலை பெண்மக்களுக்கு இயல்பாய் அமைந்து கிடக்கிறது. பெண் எப்பொழுதும் தனக்கென ஒன்றுங் கொள்வதில்லை. பிள்ளைகளை வஞ்சிக்குந் தாய் உலகிலுண்டோ? தன்னுயிர்க்கென ஒன்றிருப்பினும் அதைப் பிள்ளைகட்குக் கொடுக்கத் தாய் சிறிதும் பின்னடையாள். பிள்ளைகட்காகத் தாய் செய்யுந் தியாகத்தை இத்தகைத்தென்று எழுத்தால் எழுத முடியாது. சுருங்கக் கூறின் பெண் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவள் என்று கூறலாம். குடும்பக் கொடுமைகளைப் பொறுத்தல், உள்ளதை மற்றவர்கட்கீந்து மகிழ்தல், தனக்கென வாழாத பின்னுலகாக்கும் உயிர்கட்கென வாழ்தல், விருந்தோம்பல், ஏழைகட்குதவல் முதலிய அருங்குணங்கள் பெண்ணிடத்துப் பொலிதல் வெள்ளிடைமலை.

* * *

இப்பெருங் குணங்கள் பெண்ணின் தொண்டாகப் பரிணமிக்கின்றன. குணமிலாத் தொண்டு தொண்டாகுங் கொல்? தொண்டிற்கு வேண்டற்பாலது குணம் குணமே. பெண்ணின் பாலுள்ள தாய்மையில் எக்குணமடங்காது? உள்ள குணமெலாம் அதன்கண் அடங்கும். எனவே பெண் குணமலை யாகிறாள். பெண்ணைக் குணமலை எனப் போற்றல் எவ்வாற்றானும் பொருந்தும். குணம் முதன்மை பெறல் இயல்பன்றோ?

* * *

பெண் பிறவி தாங்கினோரில் குணமிலர் இலையோ என்று சிலர் வினவலாம். உலகில் எதற்கும் புறனடையுண்டு. புறனடையைப் பொதுமையில் புகுத்திப்பேசல் உலக வழக்கன்று. ஈண்டுப் பொது அறம்பற்றிப் பெண்ணுலகியல்பை யான் மொழிந்து வருகிறேன். பெண்வடிவந் தாங்கினோருள்ளும் பொறுமை தியாகம் முதலிய குணங்களில்லாப் பேய்களிருக்கலாம். இவர்கள் வடிவத்தால் பெண்மக்களேயன்றித் தாய்மைக்குரிய பெண்மைவாய்க்கப்பெற்ற பெண்மக்களல்ல. இவர்களே புறனடைப் பெண்மக்கள். இப்புறனடை ஆண்வோன்றிலுமுண்டு. ஒரு மாந்தோப்பை எடுத்துக்கொள்வோம். அத்தோப்பிலுள்ள மரங்

களில் இரண்டொன்று கனி கொடாமலிருக்கலாம். அவ்விரண்டொன்றைக் கொண்டு மாமரங் கனியளிக்கும் இயல்பினதன்று என்று கூறல் நியாயமாகுமோ? பெண்ணுலகிலும் யாண்டாயினும் ஒரு மூலையில் பழுது சேரலாம். அதுகொண்டு அப்பழுது பெண்ணுலகின் இயல்பு என்று கூறல் அறமாமோ? பொதுப்படப் பெண்ணுலகின் இயல்பையே நாம் கவனித்தல் வேண்டும்.

* * *

குணங்களை இரண்டு கூறுகப் பிரிக்கலாம். ஒன்று பெண்மைக் குணத்தொகுதி; மற்றொன்று ஆண்மைக் குணத்தொகுதி. பெண்மைக் குணங்களாவன: அழகு அடக்கம் பொறுமை தியாகம் பரநலம் இரக்கம் வீரம் முதலியன. ஆண்மைக் குணங்களாவன: கரடு முரடு அவா பொருமை தன்னலம் சீற்றம் முதலியன. ஆண்மகன் கரடும் முரடும் சுருளும் திரிவும் பிளவும் நிரம்பியபட்டைகள் போர்த்த வலிய மரம் போன்றவன். பெண்மகள் அக்கரடு முரடு முதலிய கொடுமைகளை ஒடுக்க, அம்மரத்தைச் சுற்றி, மனதுக்கினிய பசுமை வழங்கும் மெல்லிய பூங்கொடி போன்றவள். இக்குணமிலாப் பெண் பெண்ணாகாள். இக்குணமுள்ள ஆண்மகனும் பெண்மை பெற்றவனாகிறான். ஆண் வடிவில் பெண்மைக்குணம் பெற்ற மக்களே இதுகாறும் உலகில் அன்பர்களென்றும், அடியார்களென்றும், அறிஞர்களென்றும், வீரர்களென்றும், பாவலர்களென்றும் சொல்லப்பட்டு வருகிறார்கள். "ஆண் வடிவம் பெண்மைக்குணம்" என்பது கொண்டு அலி என்று எவருங் கருதலாகாது. அலிகள் ஆண் பெண் என்னும் இருபாலாரிலுமுண்டு. அவர்களைப்பற்றிய பேச்சே ஈண்டு வேண்டாம். அவர்கள் சபிக்கப்பட்டவர்கள். அக்கூட்டம் வேறு - ஈண்டு யான் குறிப்பிடும் ஆண் வடிவில் பெண்மைக்குணம் படைத்த கூட்டம் வேறு. ஆண் பிறவி தாங்கினோர் நல்வழியில் முயன்று பெண்மைக்குணம் பெறமுனைவாராக. * * *

சமய குரவர் நால்வரது பாட்டின் இயல்பு

திருவாளர் - வல்லை. பாலசுப்பிரமணியன் பி. ஏ. எழுதுவது

———(o)———

தோற்றுவாய்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இனி, தம்முள் பலவாற்றானும் ஒத்திருக்கும் திருக்குறளையும், நாலடியாரையும் ஒப்பிட்டுப்பார்த்து இவை தம்மின் ஆசிரியன்மார்கள் மக்கட்குப் புத்தி புகட்டுவதில் எவ்வெவ்வகைகளில் வேறுபட் டிருக்கின்றார்களென்பது நாம் அடுத்து ஆராயவேண்டுவதொன்றாம். சித்தலைச் சாத்தனார்க்கும், இளங்கோவடிகட்கும் யாம் கண்ட வேற்றுமைகளை, ஈண்டும் திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவனார்க்கும், நாலடியாரின் ஆசிரியன்மாரான சமண முனிவர்கட்கும் காண்கின்றோம். முதற்கண் திருவள்ளுவனார் தாம் வாழ்க்கைத் துணை நலம் என்னும் பகுதியுட் கூறிய பத்துத் திருக்குறட்கும் இலக்கியம் தம் மனைவியாராகிய வாசுகியம்மையாரிடமே கண்டார். அவ்வம்மையாரோடு பல்லாண்டுகளாக அவர் இல்லறம் நடாத்தி முடிவில் அவர் தம் பிரிவாற்றாமைக்காக

> "அடிசிற் கினியாளே அன்புடையாளே
> படிசொற் றவறாத பாவாய்—அடிவருடி
> பின்தூங்கி முன்னெழுந்த பேதையே [போதியோ
> என்தூங்கும் என்கண் இரா"

என்று கனிவு ததும்பப் பாடினார். மேலும், உலகத்தாரோடும், அறிவில்லாத மக்களோடும் தம்மைப் பலகாலும் உறவாடச்செய்யும் மெய்த்தொழிலை மேற்கொண்டார். ஆதலால், அவர் நூலெழுதப் புகுங்கால் பற்பல காரணங்களால் அவர் தம் மனம் இளகியிருந்தது. அவர் சாமானிய மக்களுடைய இன்ப துன்பங்களையும், இழுக்குகளையும் நன்றுயறிந்தவர். முடிவாகக் கூறுமிடத்து நாயனார் நூலெழுதுங்கால் தாம் அறிவு புகட்டும் மக்களுள் தம்மை ஒருவராக நினைத்து எழுதினாரேயன்றி, தாம் ஒரு பெரிய அறிவாகிய மேடையின் மேலேறி மக்களின் இன்ப துன்பங்களால் தாக்கப்படாது தாம் அவர்கட்குப் புத்தி புகட்டுவதாக அவர் ஒருகாலும் எண்ணினாரன்று. அப்படியின்றி, அவர் அப்படிச் செய்திருப்பரேல், அவர் நூல் ஒரு சிலர்க்கே பயன்பட்டுப் பொதுவான மக்கட்டொகுதிக்கு நூற்றை ஞான்று பயன்படுமாறு போல, பயன்படா தொழியுமெனவறிக.

நாலடியாரின் ஆசிரியன்மாரை நோக்குங்கால், எமக்கு ஒரு பக்கம் அவர்களின் முரட்டுத்தன்மையைப் பார்த்து நகையும், மற்றொரு சார் அன்னாரின் உறுதிக்கட்டுரைகளை நோக்க அச்சமும் தோன்றுகின்றன. முதற்கண் அவருள் ஒருவராவது, ஓராண் மகனின் மனதை இளகிய நீர்மைய தாக்கும் இல்லற வாழ்வினை யடைந்தவரல்லர். இளமை தொட்டே பெண்களையும், வேறு மக்கட்டொகுதியையும் வெறுத்துத் துறவு பூண்ட முனிவர்கள் ஆகையால் அவர்கட்கு மக்கட் குண்டாகும் இன்பதுன்பங்கள் யாவெனத் தெரியா; அவர்களும் அவைகளால் தாக்கப்பட்டாரல்லர். ஆதலால் அவர்கள் நூலெழுதப் புகுங்கால் தம்மைச் சாமானிய மக்களினின்றும் வேறாக நினைத்து, தம் வழியே சீரிய தென்று கருதினார்கள். அவர்கள் மக்கட்டொகுதியை ஒரு சிறிதும் பொருட்படுத்தினாரில்லை. திருவள்ளுவனார் நமக்குப் புத்தி புகட்டுவது, ஒரு கூரிய ஊசியைக் கொண்டு, நோய் தெரியாமல் குத்துவது போலிருக்குமென்றால், சமணமுனிவர்கள் கூறுவது நமது மார்பைப் பிளக்கும் கோடரி யென்றே சொல்லலாம். நாயனார் நம்மைவிளித்துக் கூறும்போது நாம் நம் இழுக்குகட்குச் சிறிது வருந்திப் பிறகு நம்மைச் சீர்படுத்திக் கொள்ள முயல்கின்றோம். ஆனால் நாலடியார்காரர் நமக்கு அறிவு புகட்டுகையில், நாம் நடு நடுங்கி வியர்ப்பெய்துகிறோம். "நாம் சீர்படுவோமா" என்ற ஐயம் நமது உள்ளங்களில் எழுகின்றது. மேற் போந்த வேறுபாடுகளை நன்கு விளக்குதற் பொருட்டு, நாயனாரது குறு வெண்பாக்களையும், நாலடியார் பாக்கள் சிலவற்றையும் ஒப்பிட்டுக் காட்டுதும்

முதற்கண், கடவுள் வணக்கத்தில் நாயனார், மக்கட்டொகுதி யெல்லோரும் பயன்பட்டுய்யுமாறு தாம் வழிபடு கடவுளையாதல் ஏற்புடைக் கடவுளையாதல் வணங்காமல், பொது வகையாகக் கடவுளின் இலக்கணங்களை யிவை யிவையெனக் கூறிக் கற்றதனாலாயபயன், வாலறிவன் நற்றாள் தொழுவ தென்றுங் கூறினார். ஆனால், சமண முனிவர்களோ வெனில் தமது வழிபடு கடவுளையே விதந்தெடுத்துத் தம் வணக்கத்திற்குப் பொருளாகக் கொண்டனர். இது பற்றியே, திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் படிக்கும் போது நமக்கு உண்டாகும் ஊக்கமும் உற்சாகமும், நாலடியாரின் கடவுள் வாழ்த்தைப் படிக்கும் போது உண்டாவதில்லை. நாயனார் மக்கட் பேற்றைப் பற்றிப் பலபட விரித்துக் கூறியிருக்க, நாலடியார் அதைப்பற்றி யொருசிறிதும் மொழிந்திலது. என்னை? அதன் ஆசிரியன் மார் மணம் புரிந்து, அதனுலெய்தும் மக்கட் பேற்றின்பத்தை யடைந்தவ ரல்லராகலானென்க.

இனி, துறவு என்னும் அதிகாரத்தில், யாமெல்லாம் எவ்வெவற்றினின்றும் நம் தொடர்பை யறுத்தோமோ, அவ்வவ்வளவு நாம் துறந்து விட்டோம் என்னுங் கருத்தை யடக்கி,

> "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன்"

என்று எத்துணைப் பக்குவமாகக் கூறுகின்றார்! இதனைப் படிக்குங் கால் சிற்சிலவற்றை நோக்க யாமும் ஒரு சிறு துறவியென்று கருத எம்மனம் நாடுகின்றது. எனெனில் யாம் சில பொருள்களிடத்தினின்றும் எம் தொடர்பை அறுத்துவிட்டேம். இவ்வுணர்ச்சி முதிர்வெய்துகாறும் யாம் சிறிது சிறிதாக மற்றவைகளையும் துறந்து, நிலையாமை யுணர்ந்து, அவாவறுத்து, மெய்யுணர்தற்கு யாதுதடையுளது? நிற்க. இக்குறுவெண் பாட்டோடு துறவென்னும் அதிகாரத்தில் நாலடியாரிற் கண்ட,

> "நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் [றெண்ணித்
> தலையாயர் தங்கருமஞ் செய்வார்—தொலை [வில்லாச்
> சத்தமும் சோதிடமும் என்றாங் கிவை [பிதற்றும்
> பித்தரிற் பேதை யாரில்"

என்னும் இப்பாட்டோடு ஒப்புநோக்குழி சமண முனிவர்கள் எதற்கும் அஞ்சாமல் சாமானிய மக்களைப் பித்தரென்றும், பேதையரென்றும் அழைக்கும்போது சாமானிய மக்களில் ஒருவேமாய எமக்கு அச்சமும், நடுக்கமுந் தோன்றுகின்றன. யாம் துறப்பதும், அத்தலையாயர்போன்று ஆவதும் முக்காலும் முடியாதென்றே கருதுகின்றேம்.

இனிப் புலான்மறுத்தலைப் பற்றிக் கூறுங்கால் நாயனார் கூறும்,

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் கை
> எல்லாவுயிரும் தொழும்" [கூப்பி

என்னும் குறட்பா நமக்கெல்லாம், புலான் மறுத்தலாலுளவாகும் பெரும்பயனை யெடுத்துக்காட்டி, நம்மைப் புலாலுண்பதினின்றும் தடுக்கின்றது. ஆனால்,

> "துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்
> மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க [கலா
> விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்
> புல்லறிவாளர் வயிறு" [கெட்ட

எனனும் நாலடியார்ப் பாட்டில் புலாலுண்பவனின் வயிற்றைச் சுடுகாட்டுக்கு ஒப்பிட்டுக் கூறுவது, அவ்வாறு உண்பவனின் கோபத் தீயை எழச்செய்கின்றது. இதுதானோ அறிவு புகட்டுமுறை? இதனைப் படித்தோர் எத்துணைபேர் புலான் மறுத்தார்களோவென அறியேம்.

மற்றோருதாரணங் காட்டுதும். பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்தில் நாயனார் கூறும்,

> "அறனியலா னில்வாழ்வானென்பான் பிற
> பெண்மை நயவாதவன்" [னியலாள்

என்பதும்,

> "பிறன்மனை நோக்காத பேராண்மை சான் [றோர்க்கு
> அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"

என்பதும், பிறன்மனை விழை பவனைப்பற்றி யொருசிறிதும் அவதூறு கூறாமல் அவ்வொழுக்கத்தைக் கைப்பிடித்தவனது பெருமை யொன்றனையே விதந்தெடுத்தோதுகின்றன. இவ்வாறின்றி,

> "புக்கவிடத் தச்சம் போதரும் போதச்சம்
> துய்க்கு மிடத்தச்சம் தோன்றாமற் காப் [பச்சம்
> எக்காலுமச் சந்தருமால் எவன் கொலோ
> உட்கான் பிறனில் புகல்"

என்பதூஉம்,

> "காணிற் குடிப்பழியாம் கையுறில் கால் [குறையும்
> மாணின்மை செய்யுங்கா லச்சமாம்- [நீணிரயத்
> துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
> இன்ப மெனக் கெனைத்தாற் கூறு"

என்பதூஉமாய இவ்விரு நாலடியார்ப் பாக்களும், காமுகனை மயிரைப் பிடித்திழுத்து வந்து, நன்றாய்ப் புடைத்துத் திட்டுவது போலிருக்கின்றன. ஈண்டும் திருக்குறட்கும் நாலடியார்க்கும் வேற்றுமைகளைக் கண்டறிக.

ஆனால் ஓர் இடத்தில் திருவள்ளுவரும் கண்ணோட்டம் பாராமல் சில பேதை மக்களைச் சாகும்படி திட்டுகிறார்.

> "செவியிற் சுவையுணராவாயுணர்வின் [மக்கள்
> அவியினும் வாழினும் என்"

எனவும்,

> "கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வி [யால்
> தோட்கப்படாத செவி"

எனவும் வருஉம் திருக்குறள்களில் நாயனார் கேள்விச் சுவையினை யறியாரைச் செவிடரென்று வெறுத்து, அவர்கள் சாதலே நன்றென்று கூறுகின்றார். என்னை? அவர்கள் செத்தாலிழப்பதும், வாழ்ந்தாற் பெறுவதும் இன்மையின், இரண்டுமொக்கு மென்பதனானென்க. ஆனால் இவ்விரு திருக்குறள்களைக்கொண்டே நாயனாரும் கண்ணோட்டம் பாராது தம்மினுங் கீழ்ப்பட்ட சாமானிய மக்களை வெறுத்துத் தள்ளுகின்றாரென்று யாம் ஒருகாலும் கொள்ளுதல் கூடாது. அத்தகைய இழுக்கினின்றும் நம்மைக் காத்துக்கொள்வோமாக.

இதனை மற்றும் மேற்சென்று விரித்தல் வேண்டா.

ஆகவே, மக்கள்தமக்குள் ஓர் இருவரேனும் சாயல், குரல், செய்கை, குணங்களால் ஒத்தில்லாததுபோன்றே ஒரே பொருளைப்பற்றிய கொள்கைகளிலும் ஒத்திருக்கின்றாரில்லையென மேற்போந்த உதாரணங்களினால் பரக்க விரித்துக் காட்டினேம். ஒருவருடைய உருவம் செய்மையிலிருக்கும் நம் நோக்குகட்குப் புலனாகாவிடினும், அன்னாருடைய நடையையுங் குரலையுங்கண்டு அவர் யாரெனச் சொல்லிவிடுகின்றோம். என்னை? அந்நடையும் அக்குரலும் வேறொருவர்க்கு மின்றி, நமக்குத் தெரிந்த அவரொருவருடைய வாதலானென்க. இங்ஙனமே, உரை நடையிலும், பாவின் நடையிலும் பற்பல காரணங்களால் ஒவ்வொருவர்க்கென ஒவ்வொரு வித நடை (Characteristic style) அமைந்து விட்டது. அவைகளிற் பழக்கப்பட்ட நாம் அவைகளைப் பல்காற் பயின்றோமாதலின், எழுதிய ஆசிரியன்மார்களின் பெயர்கள் நூற்களின்மேற் காணாவிடினும், அந்நூலின் ஒரு சில பகுதிகளை மட்டுங் காண்போமேயாகில் அந்நூலியற்றிய ஆசிரியர் இன்னவரெனத் திண்ணமாய்க் கூறிவிடலாம். இவ்வண்ணம் சிலப்பதிகாரத்தினின்றும், மணிமேகலையினின்றும், இரண்டு அடித்தொகுதிகளை யாம் காணப் பெறுவேமாகில் இவை யிவை யின்னின்ன நூல்களினின்றும் எடுக்கப்பட்டவையென்று திண்ணமாய்க் கூறமாட்டுவேம். இத்தகைய துணிவினைக்கொண்டே, பெரியபுராணத்துள்சேக்கிழாரது சீரிய நடை யமையப் பெறாத பாக்களை வெள்ளிப் பாட்டென்று ஒதுக்கித் தள்ளுகின்றோம். சீவக சிந்தாமணியுள்ளும் சிலவற்றைக் கந்திப் பாட்டென்று ஒதுக்குகின்றோம். ஆகவே, இத்தகைய மொழி நடையை யாராய் வதனால், பண்டை நூற்களில் பின்னாட்களில் இடைப்புகுந்தனவற்றைத் தள்ளிவிடுகின்றோம். ஒரு புலவர் ஒரு நூலெழுதி, யாது காரணத்தாலோ தாம் அதனை உரிமையாக்கிக் கொள்ளாது அத்தகைய நூலெழுத மாட்டாத மற்றோருக்கு அதனையுரிமையாக்கி விட்டு, அந்நூல் அம்மற்றோருடைய பெயரைத் தாங்கி நின்றாலும், அவர் அந்நூற்கு ஆசிரிய ராதலை யாம் ஏற்றுக் கொள்ளாமல் அந்நூலின் நடையைக் கொண்டு அதன் உண்மையாசிரியன் இன்னவனென மிக இலேசில் கண்டுபிடித்து விடுகின்றோம்.

(தொடரும்)

பங்களூர்க் கதர் விழா

இம்மாதம் 3உ யன்று பங்களூரில் காந்தியடிகள் திறந்துவைத்த கதர்க் கண்காட்சி ஆறுதினங்கள் சிறப்பாக நடந்து 8 உயன்று முடிவுற்றது. இவ்வைபவம் பங்களூர் வாசிகளுக்கு முன்னரே இருந்த கதர்ப்பற்றைப் பதின்மடங்கு விருத்தி செய்தது என்று பல விவரங்களால் தெரியவருகிறது. காந்தி வரவேற்புக் கமிட்டியின் தலைவரான ஜனுப் ஹாஜிமிர்ஸா ஹாஜிவேஸன், முதல் நாள் மகாத்மா காந்திக்கும், கண்காட்சியை அமைத்தவர்களுக்கும் வந்தனமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:— "நேற்றுப் பகல் முழுவதும் இரவிலும் நகரிலுள்ள கதர்க்கடைகளில் ஜனங்கள் குவிந்து அணிவாங்கிய வண்ணமிருந்தார்கள். தீபாவளிப் பண்டிகைக்கு முதல் நாள் போலவே நேற்றைய தினம் காட்சியளித்தது. கதர் வாங்க வந்தவர்களில் யாரைக் கேட்டாலும் 'நாளை கதர்க்கண்காட்சி; நான் போக வேண்டும்' என்ற பதிலேவந்தது."

3உ மகாத்மா காந்தி கண்காட்சியைத் திறந்துவைக்கையில் கதருடுத்திய ஆடவர் பெண்டிர் சமுத்திரம்போல் கூடியிருந்தனர் என்று ஒரு பத்திரிகை விவரம் சொல்கிறது. வந்திருந்தவர்களில் பிரபலமானவர்கள், திவான் மிர்ஸா இஸ்மேல், நிர்வாக சபை அங்கத்தவர்கள், மகாராஜாவின் அந்தரங்கக் காரியதரிசி ஸர் சார்லஸ் டாட்ஹண்டர், பண்டித மதன் மோகன மாளவியா, ஜம்னுலால் பஜாஜ், சங்கர்லால் பாங்கர், வல்லபாய் படேல், கொண்ட வேங்கடப்பையா, ச. இராஜகோபாலாச்சாரியார், கங்காதரராவ் தேஷ்பாண்டே முதலியோர்.

ஆறுநாட்களிலும் கதர்த்தொண்டில் ஈடுபட்டவர் பலர் கதர் வேலையின் பற்பல அம்சங்களையும்பற்றி உபந்யாசம் செய்தார்கள். பண்டித மாளவியா, ஜம்னுலால் பஜாஜ் முதலிய மேற் குறிப்பிட்ட தலைவர்களும் கதரின் மகிமையைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். பஞ்சுகொட்டுதல், நூல்நூற்றல் முதலியவைகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. ஏறக்குறைய கண்காட்சி நடந்த எல்லா நாட்களிலும் மழைபெய்து கொண்டிருந்தபோதிலும், மொத்தம் 8134பேர் கட்டணம் கொடுத்துக் கண்காட்சியைச் சென்று பார்த்தனர். 8000 ரூபா பெறுமான கதர் விற்கப்பட்டது. கடைசிநாளன்று, இவ்விவரங்களை அறிவித்த ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், 'நாங்கள் எதிர் பார்த்ததை விடக் கண்காட்சி அதிக வெற்றியுடன் நடந்தேறியது' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். மைசூர் இராஜ குடும்பத்தார் மட்டும் ஆயிரம் ரூபா பெறுமான கதர் வாங்கினர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வைபவம் சம்பந்தமாக மகாத்மா காந்தி பேசியவற்றிலிருந்தும் எழுதியவற்றிலிருந்தும் சிற்சில முக்கியமான பகுதிகளை இங்கெடுத்துத் தருகிறோம்.

கதரும் அரசியலும்

கண்காட்சியைப் பற்றி மகாத்மா காந்தி முன்னதாக எழுதிய கட்டுரையின் சாராம்சமாவது:—

பங்களூரில் நடக்கப்போகும் கதர்க் கண்காட்சியை வெற்றியுற நடத்துவதற்கு ஸ்ரீமான்கள் கங்காதர ராவ் தேஷ்பாண்டேயும், சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். இக்கண் காட்சியின் செலவுக்காக மைசூர் அரசாங்கம் ரூ500 நன்கொடை யளித்ததும், தொழில் இலாகா டைரக்டர் கண்காட்சிக் கமிட்டியில் அங்கத்தினராகியிருப்பதும், சமஸ்தானத்தில் கதரியக்கத்தின் வருங்கால முன்னேற்றத்துக்கு நற்குறிகளாகும். உண்மையில், கதரின் ஜீவகாருண்ய அம்சத்தையும் பொருளாதார அம்சத்தையும் எண்ணும்போ[illegible] களும், [illegible] ரவு அளி[illegible] கணக்கான கிராம வாசிகளுக்குத் அனைத் தொழில் ஒன்று அவசியமென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். கிராம நிர்மாணத்தைப்பற்றிய காகிதத் திட்டங்கள் பல போடப்பட்டிருக்கின்றன வாயினும் அவற்றில் ஒன்றாவது கதரைப்போல் தேச முழுவதற்கும் பொருந்தவதன்று. அவற்றில் எதுவும் கதர் வேலையைப்போல் பெரிய அளவில் சோதிக்கப்பட்டதுமில்லை. தற்போது கதர்த்திட்ட வேலை 1500 கிராமங்களில் நடந்து வருகிறதென்றால் அது கொஞ்சமென்று யாரால் சொல்ல முடியும்?

கதரில் அரசியல் அம்சம் ஒன்றிருப்பது குறித்து எவரும் அஞ்ச வேண்டியதில்லை. கதரினால் அரசியல் காரியம் எதுவும் நடைபெறுமென்றால் எள்ளி நகையாடும் அரசியல் வாதிகள் பலர் இருக்கின்றனர். கல்வியபிவிருத்தியிலும், கூட்டுறவுமுயற்சியிலும், மதுவிலக்குத்திட்டத்திலும் அரசியல் அம்சம் எவ்வளவு உண்டோ அவ்வளவு தான் கதரிலும் உண்டு. இராஜப்பிரதிநிதியும், இராஜாக்களும், மகாராஜாக்களும், மற்ற எவரும்—அவர்கள் தேசத் துரோகிகள் அல்லாவிடில்—ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வொற்றுமை ஏற்பட்டால் அதில் உள்ள பெரிய அரசியல் பயனை எவரேனும் மறுக்க முடியுமா? கதர் வெற்றியடைவது, அரசியல் வாதிகள், அல்லாதவர்கள், மன்னர்கள், ஏழைகள், ஜமீன்தார்கள், குடிகள் எல்லாருடைய ஆதரவையும் பொறுத்திருக்கிறது. ஆதலின் அரசியல் குழப்பங்களினால் பாதிக்கப்படா வண்ணம் அதை அரசியலுக் கப்பாற்பட்டதாய் வைத்திருக்க எல்லா முயற்சிகளும் செய்து வருகிறோம். கதர், புரட்சியின் அறிகுறியன்று. சுய முயற்சிக்கும், தற் சார்புக்கும், ஏழை பணக்காரர் முதலாளி தொழிலாளி என்னும் வேற்றுமைகளை ஒழிப்பதென்னும் தீர்மானத்துக்கும் அஃது அறிகுறியாகும். எனவே, ஐரோப்பியர்கள் உள்பட எல்லாரும் சமீபத்தில் நடைபெறப் போகிற கண்காட்சியை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

காந்தியின் கண்ணீர்

பங்களூரிலுள்ள நவநாகரிக ஜனங்களுக்கு ஒரு வார்த்தை. பங்களூர் வாசிகளின் அளவுக்கதிகமான ஆடைகளைப் பற்றிச் சமீபத்தில் ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரியார் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியதாக அறிகிறேன். கதரில் நம்பிக்கையுள்ளவர்கள் கூட இந்தப் பங்களூர் நாகரிகத்தை மாற்றிக் கொள்ளத் தயங்குகிறார்கள். நமது சகோதரர்களைப் பட்டினி போட்டாலன்றி இத்தகைய நாகரிக உடை தரித்தல் இயலாதென்பதை அவர்கள் நினைவு கூறவேண்டும். செல்வர்கள் தங்கள் உடையையும் வசிக்குமிடம் முதலியவற்றையும் அழகாயும் அலங்காரமாயும் வைத்திருக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஏழைகளின் நிலையையும் அவர்களுடைய நிலையையும் ஒத்திட்டுப் பார்த்துக் கொஞ்சம் நிதானம் காட்ட வேண்டுமென்று தான் நான் சொல்கிறேன். இந்தியர்களில் எத்தனையோ பேர் கோவணம் ஒன்றுமட்டுமே உடையாகக் கொண்டவர்களாயிருக்கின்றனர். ஒரு சதுர கஜத்தில் ஆறில் ஒரு பங்குக்கும் குறைவான துணி இதற்குப் போதும். நமது நாகரிக உடைகளெல்லாம் இந்தக் குறைந்த அளவு உடைக்குப்பொருத்தமாயிருக்கவேண்டாமா? ஏழைகளின் இந்தக்குறைந்த அளவை அதிகமாக்கப் போகிறதாகச் சொல்பவர்களும், முதலில் அவர்களை இன்னும் அதிக வறுமையில் ஆழ்த்தித் தங்கள் தேவைகளைப் பெருக்கிக் கொள்வதால் என்ன பயன்? கோடிக் கணக்கான ஏழை மக்களின் வாழ்வு நிலை உயர வேண்டுமோனால், அதற்கு உடனே கைப்பிடிக்கக் கூடிய சிறந்த உபாயம், நவ நாகரிக மனிதர்கள் கதரணிதலை மேற்கொள்ளுதல் தான். இதனால் அவ்வேழைகளுக்குச் சில காசுகள் போய்ச் சேர்வது நிச்சயமன்றோ?

ஆண்டவன் திருப்பணி

கதர்க் கண்காட்சியைத் திறந்து வைக்கையில், மகாத்மாவினால் உரத்துப் பேச முடியாத காரணத்தினால் அவரது உபந்யாசத்தை ஸ்ரீமான் ச. இராஜகோபாலாச்சாரியார் படித்தார். அதன் சாராம்சம் வருமாறு:—

நான் நோய் வாய்ப்பட்ட பின்னர் முதன் முதலாகப் பொது மேடைக்கு வர அநுமதிக்கப்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், மைசூர் மகாராஜாவுக்கும், மைசூர் குடிமக்களுக்கும் அவர்கள் என்னிடம் காட்டி வந்திருக்கும் பேரன்புக்காக என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். உங்களுடைய அளவற்ற உபசரணையின் காரணமாக என்னு[illegible] கள் விடுத்த வேண்டுகோளில், [illegible] நோயை அதற்கு ஒரு தூண்டுதலாக [illegible] யோகித்திருப்பதைப் பார்த்துப் பெரிதும் ஆச்சரியமுற்றேன். கதர் நிதிக்குப் பணங் கொடுத்து, கதரணிந்தும் நீங்கள் எல்லாரும் கதரையாதரித்தால் நான் விரைவில் குணம் பெறுவேன் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த எண்ணத்தை அடியோடு மறந்து விடும்படி உங்களைக்கேட்டுக் கொள்கிறேன். கதரை உங்கள் புத்தி ஒப்புக் கொள்ளா விட்டால், தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அது அவசியம் என்று உங்களுக்குத் தோன்றா விட்டால், என் உணர்ச்சியை உத்தேசித்து நீங்கள் அதை ஆதரிக்கக் கூடாது. பெரிய தேசிய விஷயங்களில் தனிப்பட்ட மனிதர்களிடம் உள்ள அபிமானம் குறுக்கே வருவது சரியன்று. என்னுடைய வீண் பிரமைகளுக்கு ஆதரவில்லையென்ற காரணத்தால் நான் நோய்வாய்ப்படுதல் உண்மையானால், அத்தகைய காரியங்களில் தலையிடா வண்ணம் நான் நோயாளியாயிருத்தலே நலமாகும்.

ஆனால் இப்போது நான் திறக்கப் போகும் கண் காட்சியின் விஷயம் வேறு. இது தான் உங்களுக்குச் செய்து கொள்ளப்படும் முறையான வேண்டுகோள். கதர் இயக்கம் இது வரை என்ன சாதித்திருக்கிறது என்பதை அது உங்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காட்டும். இக்கண்காட்சியை நீங்கள் ஆராய்ச்சி யறிவுடன் பார்த்து, அது உங்கள் புத்தியைக் கவர்ந்தால் அப்போது கதரை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் உங்கள் அறிவு கதரை ஏற்றுக் கொண்டபிறகும், அதை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டிய மனோவலிமை உங்களிடம் இல்லாவிட்டால், அப்போது என்னிடம் நீங்கள் வைத்திருக்கும் அன்பு அத்தகைய மனோவலிமையை உங்களுக்குத் தருவதாக. எனெனில், தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் யாரை மிகப் பொருத்தத்துடன் தரித்திர நாராயணர் என்று அழைத்தாரோ, அத்[illegible] ஏழையிலும் ஏழையான மக்களின் [illegible] உங்கள்முன் நான் நிற்கிறேன். [illegible] வேலையில்லாமையால் [illegible] கிடக்கிறார்கள். நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கஜம் கதரும் அக்கோடிக்கணக்கான ஜனங்களிடம் உங்கள் அநுதாபத்தைக் காரியத்தில் காட்டுவதாகும்.

கண்காட்சிக் கமிட்டியார் உங்கள் அறிவுக்கும் கண்களுக்கும் ஓர் அரும் விருந்தைச் சமைத்து வைத்திருக்கிறார்கள். அதற்கும் உங்களுக்கும் இடையே நான் அதிக நேரம் நிற்றலாகாது. கிராம புனருத்தாரண முயற்சியில் கதர் எத்தகைய உன்னத ஸ்தானமுடையது என்பதை அறிய இக்கண்காட்சி உங்களுக்குத் துணை செய்வதாக. உங்களையும் ஏழைக்கிராமவாசிகளையும் உயிருள்ள தளையினால் அது பிணைத்திடுமாக. உங்களில் சாவகாசமும் விருப்பமும் உள்ள சிலரேனும் கிராமங்களுக்குச்சென்று கதர்ச் செய்தியைப் பரப்பும்படியும், மற்ற எல்லாரும் கதரேனும் அணியும்படியும் அது செய்யுமாக. இது ஆண்டவன் திருப்பணி. இதில் வேலை மிக அதிகம். ஆனால் அதற்கும் தொழிலாளரோ மிகச்சிலர். உங்களில் ஒவ்வொருவரும் இத்தொழிலாளரின் தொகையை அதிகமாக்க முடியும்.

மிகுந்த மகிழ்ச்சியுடன், இக்கண்காட்சியை நான் திறந்து வைக்கிறேன். ஆண்டவன் திருவுளத்துக்கு இத்தொண்டு சம்மதமாயிருந்தால், தொண்டர்களும் தகுதி வாய்ந்தவர்கள் என்று அவர் கருதினால், இக்கண்காட்சியின்மீது ஆசி பொழியும்படி அப்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

கண்ணீர் பெருக்கிய காட்சி

பங்களூர்க் கதர்க் கண்காட்சியின் கடைசி நாள்விழா சரித்திரப் பிரசித்தி பெறக்கூடிய தொன்றாகும். மகாத்மாவுக்கு மனோவலிமை அதிகமுண்டு. உள்ளத்திலெழும் உணர்ச்சிகளைவெளிக்காட்டாதிருப்பதில்மகாத்மாவை விட அதிகஆற்றல்படைத்தவர் இல்லையென லாம். ஆயினும் அவர் மேற்படி தினத்தில் பொது மேடையில் பேசுகையில் கண்ணீர் பெருக்கி கலங்கி நின்றார். நூல் நூற்றல், பஞ்சு கொட்டுதல் முதலிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், உயர்ந்த கதர்த் துணி வகைகள் முதலியவற்றை அனுப்பிய வர்களுக்கும் பரிசில்கள் வழங்கிவிட்டு மகாத்மாகாந்தி பேசிக்கொண்டிருக்கையில் உணர்ச்சி மிகுதியால் கண்ணில் நீர் ததும்ப, சில நிமிஷ நேரம் எதுவும் பேசமாட்டாமல் நின்றார். இதைப் பார்த்து ஸ்ரீ தேஷ்பாண்டேயும் கண்ணீருகுத்தனர். அங்குக் கூடியிருந்த நூற்றுக்கணக்கானஜனங்களுக்கு என்றென்றைக்கும் மறக்கவொண்ணுக்காட்சியாயிருந்ததாம். அது சமயம் மகாத்மாபேசிய தன் சாராம்சத்தை இங்குத் தருகிறோம்:—

[illegible] இங்கு வடிக்கைகளில் [illegible] காட்டுவதற் [illegible] கதர் வைத்திருக்கு[illegible] அவற்றைக் காலி செய்து விடுவ[illegible] ஆறு நாள் விற்பனையைப்பற்றிய புள்ளி விவரங்களை இராஜ கோபாலாச்சாரியார் சிறிது பெருமையுடனே உங்களுக்குப் படித்துக்காட்டினர். ஆனால் உங்களுடைய சக்தி எவ்வளவு என்பதை எண்ணும்போது எண்ணாயிரம் ரூபா விற்பனை எனக்குச் சிறிதும் திருப்திதரவேயில்லை. என் மனக்கண் முன்னே, பங்களூரிலுள்ள அநேக துணிக்கடைகளையும், பங்களூர்வாசிகளான ஸ்திரீ புருஷர்கள் தரிக்கும் உடைகளையும் உருவகப்படுத்திப் பார்க்கும்போது, எண்ணாயிரம் ரூபா ஓர் ஈ கடிக்கும் சமானம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் கதர்த் தொண்டர்களுக்கே அவர்களுடைய கஷ்டங்கள் தெரியும். மற்ற இடங்களில் நடந்த கண்காட்சிகளின் கதர் விற்பனையுடன் இதை ஒப்பிடும் போது இங்கே சிறிது அதிகமாயிருந்தால் அவர்களுக்குத் திருப்தி உண்டாகி விடுகிறது. இராஜ கோபாலாச்சாரியின் திருப்தி இத்தகையது தான். ஆனால் இந்த அழகிய நாட்டில் வசிக்கும் உங்களுக்கு, நீங்கள் செய்வதற்குப் பாக்கியிருக்கும் வேலையை நானும் நினைவூட்டாதிருத்தல் தவறாகுமென்று கருதினேன்.

இந்நாட்டின் நாகரிகம் நகர நாகரிகம் அன்று. மேனாட்டின் நகர நாகரிகத்தை இந்நாட்டில் கொண்டுவந்து புகுத்தி விடலாமென்று உங்களில் யாரேனும் கனவு கண்டு கொண்டிருந்தால், அது இந்தத் தலை முறையில் அன்று, இன்னும் பல தலை முறைகளிலும் நடக்கும் காரியமல்ல வென்று அத்தகையோருக்கு எச்சரிக்கை செய்வேன். நமது தேசம் எத்தகைய தென்று ஒரு கண நேரம் சிந்தித்துப் பாருங்கள். நூறல்ல, ஆயிரமல்ல, ஏழுலட்சம் கிராமங்கள் அடங்கியது. 1900 மைல் நீளமும் 1500 மைல் அகலமு முள்ள இவ்விஸ்தாரமான தேசமெங்கும் மேற் சொன்ன கிராமங்கள் பரவிக் கிடக்கின்றன. இந்தியா அமெரிக்காவைப் போல் புதிதாக ஜனங்கள் சென்று குடிபுகுந்த தேசமன்று. எவ்வளவோ நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருக்கும் பழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் ஒரு கணத்தில் மாற்றிவிட முடியாது. இந்நாட்டிலேயுள்ள கிராமங்களை யெல்லாம் அழித்துவிட்டு நகர நாகரிகத்தை ஏற்படுத்தலாமென நீங்கள் எண்ணுவீர்களாயின், அது ஒரு நிபந்தனையினால்தான் முடியும். செங்கிஸ்கான் என்னும் கொடுங்கோலன் செய்ததாகச் சரித்திரக் கதைகளில் கூறப்படுவதுபோல் இரக்கமில்லாமல் கிராமவாசிகளைக் கொன்று குவிக்கக்கூடிய ஆயிரக்கணக்கான செங்கிஸ்கான்கள் வேண்டும். இதற்கு மாறாக, இந்நாட்டிலுள்ள கிராமங்கள் நிலைத்திருக்க நீங்கள் விரும்பினால், மேனாட்டிலிருந்து வருபவற்றுள் சக்கையைத் தள்ளி சாரத்தைமட்டும் ஏற்றுக் கொள்ள விரும்பினால், அப்போது இத்துறையில் உங்களுக்கு நிரம்ப வேலை இருக்கிறது.

இங்கே நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களைப் பார்க்கும்போது என் உள்ளம் உருகுவதுபோல் உங்கள் உள்ளங்களும் உருகுகின்றனவா என்று எனக்குத் தெரியாது. பிராமணர் — பிராமணரல்லாதார் ஹிந்து-முஸ்லிம், ஏழை-பணக்காரன் என்னும் வேற்றுமைகளை அவர்கள் அறியார்கள். அவர்களெல்லாரையும் ஒன்று பிணைக்கும் பொதுவான தளை ஒன்றிருக்கிறது. அது தான் இந்நாட்டின் வறுமை. பரிசு பெற்றவர்களில் பணக்காரக் குடும்பங்களில் பிறந்தவர்களும் ஏழைகளுடன் தங்களை ஒன்றுக்கிக் கொண்டார்கள். விளையாட்டுப் போட்டிப் பந்தயங்களில் உங்களுக்குள்ள சிரத்தை இராட்டைப் பந்தயங்களில் உண்டா வென்று நான் அறியேன். கால்பந்திலோ கிரிக்கட் விளையாட்டிலோ, குதிரைப் பந்தயத்திலோ வெற்றிபெற்றவர்கள் இங்கிருந்தால் உங்களில் சிலர் எவ்வளவு உற்சாக மடைவீர்கள் என்பதை நான் அறிவேன். விளையாட்டுப் பந்தயங்களின் பாஷையை நீங்கள் அறிவதுபோல், நூற்பவர்கள் பஞ்சு கொட்டுபவர்களின் பாஷையை அறிவீர்களா என்பது எனக்குத் தெரியாது. கண்காட்சிக்கு நீங்கள் வந்து பார்த்தபோதிலும், இதனுள்ளே மறைந்திருக்கும் கருத்துகளைக் கண்டு கொண்டீர்களாவென அறியேன். அப்படி யறிந்திருந்தீர்களாயின், இந்த நிமிஷத்தில் என் இதயத்தில் பொங்கித் ததும்பிக்கொண்டிருக்கும் உணர்ச்சி வெள்ளம் உங்களையும் தன்வயப்படுத்தியிருக்கும். எனது உடல்பலவீனமாயிருக்கும் இந்நிலைமையிலும் என் உணர்ச்சிகளை உங்களுக்கு வெளியிட விரும்புகிறேனன்றோ? (இப்போதுதான் மகாத்மாவுக்கு உணர்ச்சிமேலீட்டினால் பேச முடியாமல்போனது. அவர் கண்களில் நீர் ததும்பிற்று. சில நிமிஷ நேரம் அவர் மௌனமாயிருந்தார்.) பின்னர் அவர் தொடர்ந்து கூறியதாவது:—

இக்கண்காட்சியின் உட்பொருளை அறிந்து கொள்வதற்கான மனோவலிமையையும், அறிவையும் உங்களுக்கு ஆண்டவன் அருளுமாறு [illegible]

ரவீந்திர நாதரின் வாழ்க்கைக் குறிப்புகள்

கவி ரவீந்திரநாத தாகூரின் நெடுநாள் நண்பரான ஸ்ரீநாகேந்திரநாத் குப்தா என்பார் கவியின் வாழ்க்கையிலிருந்து சில சுவையுள்ள விவரங்களை இம்மாதத்திய "மாடர்ன் ரிவியூ" பத்திரிகையில் தந்திருக்கிறார். அவற்றின் சாராம்சம் வருமாறு:—

பள்ளிப்படிப்போ, கலாசாலைக் கல்வியோ ரவீந்திரருக்கு அணுவளவும் கிடையாது. சிறு பிள்ளையாயிருந்தபோது அவர் சிலநாள் பள்ளிக்கூடத்துக்குச் சென்றதுண்டு. ஆனால் அவரது மென்மை இயல்புக்கும், பள்ளியில் கட்டுப்பாடு என்ற பெயரால் நடந்த பொருளற்ற நிர்ப்பந்தங்களுக்கும் பொருந்தவில்லை. அவரை யொத்த வயதுள்ள சாதாரண சிறுவர்களின் சகவாசமும் அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே, சில நாளைக்கெல்லாம் அவர் பள்ளிக்கூடத்துக்குத் தலை முழுகிவிட்டுப் போய்ச்சேர்ந்தார். ஆனால் வீட்டில் அவரைப்போல் முயற்சியுள்ள மாணாக்கனைக் காணல் அரிது. மிக இளம் வயதிலேயே அவர் கவி புனையத் தொடங்கினார். இளம்பிராயத்திலேயே இங்கிலாந்து போந்தார். ஆனால் அங்கு ஐ. சி. எஸ் பரீட்சைக்கோ, பாரிஸ்டர் பரீட்சைக்கோ செல்ல அவர் முயலவில்லை. மிஸ்டர் ஹென்ரி மார்லி என்பாருடன் சிலகாலம் படித்தார். அப்போதே இங்கிலாந்தில் தமது அநுபவங்களைப்பற்றி வங்காளி மொழியில் கடிதங்கள் எழுதினார். பதினெட்டு வயது நிரம்பாத அக்காலத்தில் அவர் எழுதிய அக்கடிதங்களில் தாம் கண்ட காட்சிகளைப் படம் பிடித்ததுபோல் மிக நன்றாய் வருணித்திருக்கிறார். அவர் இந்தியாவுக்குத் திரும்பியதும் அவரிடம் இரண்டு அம்சங்கள் குறிப்பிடத் தக்கனவாயிருந்தன. முதலாவது, இங்கிலாந்து வாசத்தினால் அவரது வாழ்வு முறையில் எவ்வகை மாறுதலும் ஏற்படவில்லை. ஐரோப்பிய நடை உடை பாவனைகளை அவர் கைக் கொண்டாரில்லை. மற்றொன்று, அவர் ஆங்கில இலக்கியம் நிரம்பப்படித்து மிக நன்றாக ஆங்கிலத்தில் எழுத வல்லவராயிருந்தும், ஆங்கிலத்தில் எழுதுவதே கிடையாது. அவர் எழுதிய நூல்கள், கவிகள் மட்டுமேயன்றிக் கடிதங்களுங்கூட வங்காளியிலேயே எழுதப்பட்டன. அவர் முதன் முதல் ஆங்கிலம் எழுதத் தொடங்கியது தமது கவிகளைத் தாமே மொழி பெயர்த்தபோது தான்!

* * *

கவியின் இயல்பு அரசியல் குழப்பங்களுக்குச் சிறிதும் ஏற்றதன்றாயினும், அவர் தம் தாய் நாட்டை மறந்தவரல்லர். ஒருமுறை அவர் ஓர் அரசியல் மகாநாட்டில் தலைமை வகித்து வங்காளி மொழியில் ஆழ்ந்த கருத்துக்கொண்ட ஓர் உபந்நியாசம் நிகழ்த்தினார். வங்காளப் பிரிவினையின்பயனாய் நாடெங்கும் தீவிரமான உணர்ச்சி ஏற்பட்டிருந்த காலத்தில், இத்தேசபக்த ஆசு கவியின் இதயமும் அடிஅடித்தெழுந்தது. அக்காலத்தில் அவர் பாடிய பாட்டுக்கள் பொதுக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும், சிறைச் சாலைகளிலும், வீடுகளிலும், வீதிகளிலும், எங்கெங்கும் பாடப்பட்டன. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கப்பால் வங்காள அரசாங்கம் அவருக்குப் பெரும் அரசியல் சிறப்பை அளிக்க விருந்தது ஒரு மயிரிழையால் தவறிவிட்டது. கல்கத்தாவில் கூடிய ஒரு பெருங் கூட்டத்தில் ரவீந்திரர் ஓர் உபந்நியாசம் செய்தார். அது பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. உடனே, வங்காள அரசாங்கத்தின் பிரதம காரியதரிசி மிஸ்டர் மாக்பர்ஸனிடமிருந்து அஃது அரசாங்க துவேஷப் பிரசங்கம் என்றும் அம்மாதிரி பிரசங்கங்கள் செய்யக் கூடாதென்றும் எச்சரிக்கை வந்தது. வழக்குமட்டும்தொடரப்படவில்லை. இவ்வெச்சரிக்கைக் கடிதத்[illegible]த் தாம் பதிலே [illegible]ர் என்னிடம் [illegible]ழ்ச்சியைப் பற் [illegible]லரேயாவர். இ[illegible] உணர்ந்து அவ [illegible]செய்த முதற் [illegible]ரில் ரவீக் [illegible]ப்போது [illegible] பிர [illegible]ங்க[illegible]

காரவர்க்கத்தின் மனோபாவத்தை விளக்க இஃது ஒரு சிறந்த உதாரணமாகும்.

* * *

சில ஆண்டுகள் சென்றதும் ரவீந்திரருக்கு நோபல் வெகுமதி வழங்கப்பட்டது. இது நிகழ்ந்தது எவ்வாறு? மேற்படிவெகுமதியை வழங்குவதற்கு ஏற்பட்ட அறிஞர் கூட்டத்துக்கு, ரவீந்திரர் எம்மொழியில் தம் நூல்களை எழுதினாரோ அம்மொழியைப்பற்றி ஒன்றுமே தெரியாது. வங்காளி மொழியில் அவர் பாடிய கவிகளில் ஒரு சிலவற்றை அவரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஒரு சிறு புத்தகமாக வெளியிட்டிருந்தார். இப்புத்தகமே அவர்களிடம் இருந்தது. ஆங்கில மொழிபெயர்ப்பில் கவிகள் எதுகை, மோனையுடன் அமைந்திருக்கவில்லை. ஆனால் அவற்றில் பாட்டின் உயிர் ஊடுருவி நின்றது. எனினும், ரவீந்திரருக்கு அவ்வெகுமதியை அளித்த அறிஞர்கள், வெகு தூரம் கிழக்கே சென்று ஐரோப்பிய தேசமொன்றின் ஆதிக்கத்திலிருக்கும் ஒரு நாட்டவரைத் தேர்ந்தெடுத்தபோது, மேற்படி நோபல் வெகுமதிக்கே தாங்கள் ஒரு சிறப்பை அளித்ததாக அறிந்திருக்க முடியாது. நோபல் வெகுமதிக்கு அது சிறப்பாவதெங்ஙனமெனில், இதுகாறும் அவ்வெகுமதி பெற்ற மனிதர்களுக்குள்ளே ரவீந்திரநாத் தாகூருடன் ஒப்பிடத்தக்கவர் எவருமில்லையன்றோ?

* * *

ரவீந்திரருக்கு நோபல் வெகுமதி வழங்கப்பட்டதின் பொருட்டு அவருக்கு வாழ்த்துக்கூற, கல்கத்தாவிலிருந்து மிகச் செல்வாக்குள்ள பிரமுகர்களடங்கிய ஒரு பிரதிநிதிக் கூட்டத்தார் சாந்தி நிகேதனத்துக்குச் சென்றனர். அவர்களுக்குப் பதிலளித்தபோது கவி சிறிது மனத்துயரத்துடன் பேசினார். அவர் எழுதியன வெல்லாம் அவர் சொந்த நாட்டிலே, சொந்த மொழியிலே எழுதப்பட்டனவல்லவா? அவருடைய புத்தகங்கள், வங்காளத்தில் வாசிக்கத்தெரிந்தவர்கள் எல்லாருக்கும் கிடைக்கக்கூடியனவாயில்லையா? அவருக்கு நோபல் வெகுமதியைக் கொடுத்தவர்கள் அவருடைய கவிகளில் ஒரு சிலவற்றை, அதிலும் மொழி பெயர்ப்பிலேயே பார்த்தார்கள். வங்காளி மொழியில் ஓர் அட்சரமேனும் அவர்களுக்குத் தெரியாது. எனவே, ரவீந்திரர் வருத்தத்துடன் பேசியது நியாயமேயாகும். அவருடைய மேதையை, ஐரோப்பியர் அங்கீகரித்தபின்னரே வங்காளிகள் பாராட்டுவதென்றால் அதைவிட வெட்கக்கேடு வேறென்ன? அக்காலத்தில் மிஸ்டர் ஹாவல் என்னும் அறிஞர் "ஹிந்து ஆரிய நாகரிகம்" என்னும் நூல் ஒன்று எழுதினார். அதன் முன்னுரையில் அவர் "ஆங்கிலோ இந்திய அதிகாரிகளோ, கல்கத்தா சர்வ கலாசாலையாரோ உலகில் சிறந்த இலக்கியத்துக்கு ஒரு வெகுமதி அளிக்கத் தீர்மானித்திருந்தால் வங்காளிக்கவி ஒருவரைக் கண்டுபிடித்திருக்கவே மாட்டார்கள்" என்று குறிப்பிட்டார். நமது ஜனங்கள் உண்மை மேன்மையைக் காண முடியாதிருப்பது துரதிர்ஷ்டவசமேயாகும். ஒருவனுக்கு ஒரு நல்ல அரசாங்க உத்தியோகமோ அல்லது உபயோக மற்ற பட்டமோ கிடைத்துவிட்டால் அவன் பெரியவீரனாகி விடுகிறான். சில காலத்திற்கு அவனைச் சிறப்பிப்பதற்காக நடக்கும் விருந்துகளுக்குக் கணக்கில்லை.

* * *

உலகின் மதிப்பில் நோபல் வெகுமதி மிகப் பெரிதாய்க் காணப்படுகிறது. ஆயினும் மேதையைப் பாராட்டுவதற்குச் சிறந்த வழி பணப்பரிசில் அளிப்பதகுமா? வாழ்க்கைக்குப்போதிய பணமில்லாமல்திண்டாடும் ஆசிரியனுக்கு அது பெரிதும் உதவியாயிருக்கலாம். ஆனால் இவ்வெகுமதி 8000 பவுனேயாக, குத்துச் சண்டையில் வெற்றி பெறுபவர்களுக்கு எட்டுலட்சம் டாலர் வரையில் வெகுமதி கிடைத்து விடுகிறது! ரவீந்திரநாதர் நோபல் வெகுமதிப் பணத்தில் ஒரு பைசாவையும் தமக்கு எடுத்துக் கொள்ளவில்லை. முழுவதையும் விசுவபாரதிக்கே கொடுத்துவிட்டார். இவ்வாறே அனடோல் பிரான்ஸ், ஜார்ஜ் பர்னார்டு ஷா முதலிய அறிஞர்களும் வெகுமதிப் பணத்தைத் தங்கள் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள். ஆனால் பண தேவதை ஆட்சி செலுத்தும் இக்காலத்தில் எவருடைய புத்தகப்பிரதிகள் அதிகமாக விற்கப்படுகின்றனவோ அவரே சிறந்த ஆசிரியர் என்று கருதப்படுகிறார். இப்படிப்பார்த்தாலுங் கூட, ரவீந்திரருக்கு எளிதில் முதன்மை ஸ்தானம் கிடைத்து விடுகிறது. ஒரே ஒரு ஜெர்மானியப் புத்தகக் கம்பெனி மட்டும் அவருடைய புத்தகங்கள் சிலவற்றின் பிரதிகளில் 50 லட்சம்வரை விற்றிருக்கிறது.

* * *

நோபல் வெகுமதி பெற்றதும் ரவீந்திரருக்கு வந்த வாழ்த்துச் செய்திகளுள் காலஞ்சென்ற மிஸ்டர் மாண்டகுவினிடமிருந்து வந்ததும் ஒன்று. அப்போது மாண்டகு இந்தியாவின் உதவி மந்திரியாயிருந்தார். அவர் உண்மையான மரியாதையுடன் மனப்பூர்வமாய் வாழ்த்துக் கூறியிருந்தார். அடுத்த முறைபட்ட ஜாபிதா வெளியானபோது ரவீந்திரருக்கு 'ஸர்' பட்டம் அளிக்கப்பட்டிருந்தது. இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தம் இருக்கலாமாயினும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. இந்திய அரசாங்கத்தார் இரண்டே முறைகளில் தான் கவியின் விஷயத்தில் சிரத்தை காட்டினார்கள் என்பதே கவனிக்கற்பாலது. முதலில், அரசாங்க துவேஷப் பிரசாரகர் என்று பயமுறுத்திய போதும், பின்னர் நோபல் வெகுமதி கிடைத்ததும் 'ஸர்'பட்டம் அளித்தபோதும். இப்பட்டமளிப்பு நிகழ்ச்சிக்கு மகிமை வாய்ந்த முடிவு ஒன்று உண்டு. இராணுவச் சட்டமென்னும் பேயினிடம் அகப்பட்டுப் பஞ்சாப் மாகாணம் இரத்தம் பெருக்கிக் கொண்டு கிடந்தபோது, ரவீந்திரரின் தேசபக்தி ததும்பிய உள்ளம் அவரது சகோதரர்களின் துயரத்தைக் கண்டு துடிதுடித்தது. உடனே தமது பட்டத்தைத் தூக்கி வீசி எறிந்தார். அக்காலத்தில் அவர் லார்ட் செம்ஸ்போர்டுக்கு எழுதிய கடிதம் சரித்திரத்தில் பிரசித்திபெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. அற்பமான பட்டங்களை எல்லாம் தங்கள் வீட்டுவாயிலில் எழுதித் தொங்கவிட்டுக்கொள்ளும் நம்மவர்களுக்கு இது சிறந்த படிப்பினையன்றோ? ரவீந்திரர் தமது பட்டத்தை வீசி எறிந்ததால் கொடுங்கோன்மையை அறைகூவிப் போருக்கழைத்தார். யுத்த அரங்கத்தில் எதிரியின் வாள்பலத்தை வெல்லும் செயலினும் இது சிறந்த வீரச் செயல் அன்றென யார் சொல்ல முடியும்?

* * *

புலமைத் துறையில் மேதைகளாயுள்ளோர் ஆடம்பர வாழ்வில் பற்றுள்ளவர்களாயிருப்பதுண்டு. நமது ரவீந்திரருக்கு அத்தகைய ஆசை சிறிதும் கிடையாது. சாந்தி குடிகொண்ட அவரது ஆசிரமத்தில் பிரமசாரிகளும், தூரதூர தேசங்களிலிருந்து வந்த ஆசிரியர்களும் புடைசூழ அவர் வீற்றிருப்பது பண்டைக் காலத்து மகரிஷிகள் காடுகளில் சீடர்களுடன் வசித்ததையே நினைவூட்டும். அங்கு அவர் 'குருதேவர்' என்றே எல்லாராலும் அழைக்கப்படுகிறார். மேனாட்டு உடைதரித்து மகிழும் நம்மவர்கள் போல்பூருக்குச் சென்று ஒருமுறை பார்த்தால் திடுக்கிட்டுப் போவார்கள். ரவீந்திரர் என்னும் காந்தத்தினால் கவரப்பட்டு ஐரோப்பாவின் பெயர் பெற்ற ஆசிரியர்கள் பலர் அடிக்கடி அங்குவருவதுண்டு. அம்மேனாட்டுப் பண்டித மணிகள் சாந்தி நிகேதனத்திலிருக்கும்போது விகுவான, அழகற்ற ஐரோப்பிய உடையைப் புறக்கணித்து வங்காளத்தின் அழகிய ஆடையைத் தரிக்கிறார்கள். ஐரோப்பாவின் நாகரிகம் உயர்ந்தது என்னும் அதிசயமான, அவமானமான மாயையினால் மூடப்படாத எந்த இந்தியன் தான் ஐரோப்பிய உடையை மேற்கொள்வான்? மேனாட்டில் உடை விஷயத்தில் கற்பனை என்பது மிகவும் குறைவு. ஐரோப்பா, அமெரிக்கா இவ்விரண்டு கண்டங்களிலுமுள்ள மக்களெல்லாரும் ஒரே வகை உடையே அணிகிறார்கள் என்று சொல்லலாம். இரண்டு நேர்க்கோடுகளின் மேல் நிற்கும் ஒரு நாற்கோணம்போல் ஐரோப்பிய உடை மனிதனைச்செய்து விடுகிறது. இதை விடக் கலையழகு குறைவான உடை வேறில்லையென்று நான் கூறுவேன். ஐரோப்பிய உடை மனிதன் தன் அங்கங்களைச் சரிவர உபயோகிக்க முடியாமல் நெருக்கி விடுகிறது என்றும், இதனால் அவன் ஆயுளே குறுகி விடுகிறதென்றும் பெயர்பெற்ற அறிஞரான தாமஸ் எடிஸன் கூறுகிறார். இதற்குமாறாக இந்திய உடைகளோ அழகு பொருந்தியனவாயும், உறுப்புகளை இறுக்காதனவாயும், நேராக விரைத்துக் கொண்டு நில்லாமல் மடிப்பு மடிப்பாய் வளைந்து வளைந்து விழுவனவாயுமிருக்கின்றன. ரவீந்திர நாதர் வெளிநாடுகளில் பிரயாணம் செய்யுங் காலத்தில் கீழ்நாட்டு உடையைத் தமக்கே உரிய ஒரு தனி முறையில் தரிக்கிறார். ஐரோப்பாவின் சிறந்த இலக்கியங்களை யெல்லாம் ரவீந்திரரைப் போல் ஆராய்ச்சி செய்த இந்தியர் வேறொருவர் இல்லை யெனலாம். ஆயினும் அவர் ஐரோப்பிய நாகரிகத்தின் சக்கையை எடுத்துக் கொண்டு சாரத்தைத் தள்ளிவிடும் தவறைச் செய்யவில்லை.

* * *

மேனாட்டிலும், தூர கீழ்த்திசை நாடுகளிலும் ரவீந்திர நாதருக்கு அளிக்கப்பட்ட அதி ஆச்சரியகரமான வரவேற்பு, அவர் நோபல் வெகுமதி பெற்றதின் காரணமாக அளிக்கப்பட்டதாகுமா? அப்படிச் சொல்வதற்கில்லை. ஏகாதிபத்தியத்தின் கவி என்று பெயர் பெற்ற ரட்யார்ட் கிப்ளிங்குக்கும் நோபல் வெகுமதி கிடைத்தது. அவர் உலகத்தைச் சுற்றிவரத் தொடங்கினால் இந்தியக் கவியைப் போல் அவருக்கு உபசாரம் நடக்குமா? நோபல் வெகுமதி ரவீந்திரரை மேனாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தது. அவ்வளவுதான்; மற்றப்படி, அவர் எறிந்துவிட்ட "ஸர்" பட்டம் எவ்வளவு அவருக்குப்பயன் பட்டதோ அவ்வளவு தான் நோபல் வெகுமதியும் பயன் பட்டது. கண்டத்திலிருந்து கண்டம், தேசத்திலிருந்து தேசம், தலை நகரிலிருந்து தலைநகர், அவர் திக் விஜயம் செய்துகொண்டு போனபோது கீழ் நாடும் மேனாடும் அவரை ஒரு ஜகத்குருவாகவே நினைத்து வழிபாடு செய்தன. பெரிய பெரிய மனிதர்களும், மிகச்சிறந்த அறிஞர்களும் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு அவருக்குமரியாதை செய்தார்கள். சர்வகலாசாலைகள் தங்கள் கதவுகளைப்பரக்கத் திறந்து அவரை வரவேற்றன. சாதாரண மனிதர்களும், ஸ்திரீகளும் கீழ்நாட்டுத் தீர்க்கதரிசியை ஒரு முறை கண்ணால் பார்ப்பதற்காகக் கூட்டத்தில் முரண்டிக் கொண்டு முன்வந்தார்கள். பெரிய கூட்டங்களில் அவர் ஆங்கிலத்தில் பேசிய மொழிகள் அந்தந்த நாட்டு பாஷையில் பெயர்த்துச் சொல்லப்பட்டன. அவர் வங்காளியில் பாடிய பாட்டுக்களை ஜனங்கள் பரவசமாய்க் கேட்டுக் கொண்டிருந்தனர். பொருள் தெரியாவிடினும் அவருடைய குரலின் இனிமை அவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்திவிட்டது. இப்படி உலகில் சென்ற விடங்களிலெல்லாம் உற்சாகமாக வரவேற்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டதற்கு வேறோர் உதாரணம் சரித்திரத்திலேயே இல்லையெனலாம்.

* * *

ரவீந்திரருக்கு அவருடைய மேதையும், அற்புத கவிதா சக்தியும் இல்லையென்று வைத்துக்கொண்டால், அப்போதும் அவர் ஒரு மகான் என்பதில் ஐயமில்லை. மாசற்ற அவரது ஒழுக்கமும், தூயவாழ்வு முறையும், தாய் நாட்டினிடம் அளவில்லா அன்பும், இறைவனிடம் அசைக்க முடியாத நம்பிக்கையும் அவரை மகான் ஆக்கப் போதுமானவையாம். சாதாரண மனிதர் என்ற முறையிலேயே அவரை இந்நாட்டார் தங்கள் வாழ்க்கைக்கு ஓர் இலக்கியமாகக் கொண்டு தாழ்மையுடனும், மரியாதையுடனும் அவரைப் பின்பற்றி நடக்க முயலுதல் தகும்.

அடுப்புக் கரியை நன்றாகத் தூள் செய்து அதனால் பல் துலக்கினால் பற்கள் பிரகாசமாகவும் வெண்மையாகவும் ஆவதுடன், பல் விடுக்குகளில் இருக்கக் கூடிய அழுகிய உணவுப் பொருள்களினால் விளையும் தீமைகளும் இல்லாமற் போகும் என்று 'டிட்பிட்ஸ்' பத்திரிகை கூறுகிறது.

ஒருவர் ஓர் இந்தியனை அடித்ததைத் தாமும் தமது ஜெர்மானிய நண்பர் ஒருவரும் பார்த்ததாகக் கூறினாராம். மிஸ்டர் ஷா இதுகுறித்து உடனே போலீஸாருக்குத் தெரிவியாததால், அது வெறுங்கதையென்றே தாம் கருதுவதாக எரல் விண்டர்டன் பதிலளித்தார். அத்துடன் நில்லாமல், எப்போதும் தங்கள் சொந்த தேசத்தை இழித்துப் பேசும் மனிதர்களைப் பற்றிக் கேவலமாகக் குறிப்பிட்டார். உடனே மிஸ்டர் ஷா எழுந்து விண்டர்டன் பிரபுவின் கூற்று "கலப்பற்ற முழுப்பொய்" என்று கூறினாராம். இவ்விருவருடைய கூற்றுகளில் எது உண்மையென நாம் ஊகித்தறியலாம். சாதாரணமாய், எவரும் தமது சொந்த நாட்டார் மீது அசாரணமாக அவதூறு கூறமாட்டார். அதிலும் தேசபக்தியிற் சிறந்த பிரிட்டிஷார் ஒருவரோ அவ்வாறு செய்வர்? மேலும், மிஸ்டர் தாமஸ் ஷா பார்த்ததாகச் சொல்வது போன்ற நிகழ்ச்சிகள் இந்நாட்டில் அசாதாரணமல்ல வென்றும் நாம் அறிவோம். உண்மையில், எரல் விண்டர்டனின் நிலைமை குறித்து நாம் பெரிதும் இரங்குகிறோம். சொந்தக் காரியங்களைப் பொறுத்தவரை அவர் கண்யத்திற் சிறந்த கனவானாயிருக்கலாம். முப்பது கோடி இந்தியர்களை ஆளவேண்டிய பொறுப்பும், தற்கால அரசியல் ஒழுக்கமும் அவரை இந்நிலைக்குக்கொண்டு வந்துவிட்டன. பாவம்! அவர் என் செய்வார்?

தீண்டாமைக்கு வாக்கு

பச்சையப்பர் தர்ம ஸ்தாபனத்தின் தர்மகர்த்தர்கள் தீண்டாமைக்கு வாக்குக் கொடுத்த செய்தி யறிந்து வருந்துகிறோம். பச்சையப்பர் கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் ஆதிதிராவிடர் சேர்த்துக் கொள்ளப்படாதது குறித்து நீண்ட நாளாகக் கிளர்ச்சி நடந்து வருகிறது. சென்னை உயர்தர நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் நடைபெறுகிறது. நீதிமன்றத்தார் இது சம்பந்தமாக தர்மகருத்தர்களின் கருத்தைக் கேட்டிருந்தனர். சென்ற திங்கட்கிழமை நடந்த தர்மகர்த்தர் கூட்டத்தில் ஆதிதிராவிடர் சேர்க்கப்படுதலுக்கு விரோதமாகத் தீர்மானிக்கப்பட்டதாம். வந்திருந்த ஏழு அங்கத்தவரில் ஸ்ரீமான்கள் வி. திருமலைப்பிள்ளை, பி. எம். சிவஞான முதலியார், ஸர் எம். சி. டி. முத்தையா செட்டியார், வேங்கடேசுவரலு இவர்கள் ஆதிதிராவிடரைச் சேர்ப்பதற்கு விரோதமாகவும், ஸ்ரீமான்கள் பி. வி. நடராஜ முதலியார், பி. டி. குமாரசாமி செட்டியார், கோபதி நாராயணசாமி செட்டியார் இவர்கள் அதற்குச் சாதகமாகவும் வாக்களித்தார்களாம். ஸ்ரீமான் ஏ. அரங்கசாமி ஐயங்கார் காலந்தாழ்த்து வந்தாராம்! தற்காலக் கல்வியும், பயிற்சியும் இல்லாத காலத்தில் பச்சையப்பர் மிகச்சிறந்த அறம் ஒன்றை நிறுவினார். அப்பெரியார் இதுகாலை இருந்திருந்தால் ஆதிதிராவிடமக்கள் முன்னேற்றத்துக் கென்றே தமது செல்வத்தைப் பயன் படுத்தியிருத்தல் கூடும். அவருடைய அறங்களைப் பரிபாலிப் போரின் செயலை அவர் இன்று தமது சூக்கும சரீரத்திலிருந்து பார்க்கக் கூடுமானால் அவர் உள்ளம் பெரிதும் வருந்துமென்பதில் ஐயமில்லை.

ஹிம்சை வாதிகளுக்கு ஒரு பாடம்

அயர்லாந்திலிருந்து துயரம் தரும் செய்தியொன்று வந்திருக்கிறது. அந்நாட்டு அரசாங்கத்தின் உப அக்கிராசனரான மிஸ்டர் ஓ ஹிக்கின்ஸ் என்பார் பட்டப்பகலில் நடுத்தெருவில் சுட்டுக்கொல்லப்பட்டாராம். கொலைகாரர்கள், பிரிட்டிஷ் தொடர்பே உதவாதென்னும் கொள்கையுடைய குடியரசுக் கட்சியினராயிருக்க வேண்டுமென ஊகிக்கப்படுகிறது. பிரிட்டனுக்கும் அயர்லாந்துக்கும் உடன்படிக்கை ஏற்பட்டதும், உடன் படிக்கைக்காரர்களுக்கும், குடியரசுக் கட்சியாருக்கும் ஏற்பட்ட பெரும் போராட்டத்தில், பின்னவர்களை ஒடுக்குவதில் மிஸ்டர் ஹிக்கின்ஸ் முதன்மையாயிருந்தவர். இக்காலத்தில் இவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் குறிப்பிடத் தக்கதாகும். இவருடைய உயிர் நண்பரான மிஸ்டர் ரோலு ஓகானர் என்பார் உடன்படிக்கைக்குப் பெரும் விரோதியாயிருந்தார். உடன் படிக்கைக்குச் சாதகமானவர்களில் பலருடைய உயிருக்கு அவர் நமனானார். அவர் பிடிபட்டதும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. மிஸ்டர் ஓஹிக்கின்ஸ் தமது அருமை நண்பரின் மரணதண்டனையை உறுதிப்படுத்தினார். தண்டனை நிறை வேற்றப்பட்ட இரவில் நெடுநேரம் விழித்திருந்து துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டதும் மூர்ச்சையுற்று விழுந்தாராம். பின்னர், மிஸ்டர் ஓகானரின் மரணசாஸனம் படிக்கப்பட்ட போது, அவருடைய சொத்து முழுவதையும் மிஸ்டர் ஹிக்கின்ஸின் குடும்பத்துக்கு எழுதிவைத்திருப்பதாகத் தெரிந்ததாம். இச்செய்தி கேட்டதும் "என் கடமையைச் செய்தேன்" என்று மிஸ்டர் ஹிக்கின்ஸ் கூறினாராம். இப்போது அவரைக் கொலை செய்தவர்களும் தங்கள் கடமையைத் தாங்கள் ஆற்றியதாகக் கூறுவார்கள்போலும்! மிஸ்டர் ஹிக்கின்ஸ் உயிர் விடுந்தறுவாயில் "என் பகைவர்களை நான் மன்னித்து விடுகிறேன். என் தாய் நாட்டுக்காக உயிர் துறக்கிறேன்" என்று கூறினாராம். அவர் தம் பகைவர்களை மன்னித்து விடலாம். ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகளால் நாட்டில் பகைமையும் பூசலும் வளர்ந்து தீமை விளையாமல் போமோ? அயர்லாந்தின்நிலை, இந்தியா சுதந்திரமடைய ஹிம்ஸைமுறைகளைக் கையாளலாம் என்னும் கருத்துடையவர்களுக்கு ஒரு சிறந்த படிப்பினையாகும். ஒரு காலத்தில் இணைபிரியா உயிர்த் தோழர்களாய்த் தோளோடு தோள் நின்று தாய் நாட்டின் விடுதலைக்குப் போராடிய வீரர்கள், பிற்காலத்தில் தங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் சுட்டுக் கொன்று கொள்ளும் நிலைமை ஏற்பட்டதெனில், ஹிம்சை வழியின் கொடுமையை என்னென்று கூறுவோம்?

கங்கா ராமின் அறங்கள்

விவசாயக் கமிஷன் அங்கத்தினராய் இங்கிலாந்து போந்திருந்த ஸர் கங்காராம் அந்நாட்டிலேயே மரணமடைந்தார் என்னும் செய்தியறிந்து வருந்துகிறோம். இந்நாட்டில் அறம் வளர்ப்போர்க்கெல்லாம் ஸர் கங்காராம் ஓர் இலக்கியமாவர். நாட்டில் இருக்கும் கோயில்கள் போதாவென்று புதிய புதிய கோயில்கள் கட்டுவோரும், சோம்பேறிகள் உண்டுஉறங்குவதற்குச்சத்திரங்களும் மடங்களும்கட்டுவோரும் இத்தேசத்தில் பலர் உண்டு. ஆனால் ஸர் கங்காராமைப் போன்று தேசமுன்னேற்றத்துக்குரிய சீரிய அறங்கள் செய்வோர் மிகச் சிலர் ஆவர். 1923-ம் ஆண்டில் அவர் 29 லட்சம் ரூபா பெறுமான சொத்துக்களை அறத்துக்கென்று எழுதிவைத்து தர்மகர்த்தர்களையும் ஏற்படுத்தினார். இச்சொத்துகளின் வருஷ வருவாய் 1,20,000 ரூபா ஆகும். இவ்வருவாயினால், ஒரு தரும வைத்தியசாலை, ஒரு விதவா விவாக சங்கம், ஒரு சிறந்த புத்தகசாலை இவை உள்பட ஆறு தர்மஸ்தாபனங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றையல்லாமல் ஸர் கங்காராம், விதவாசிரமம் ஒன்றும், ஹிந்து பெண்மணிகளுக்குத் தொழிற் பயிற்சிதரும் பள்ளிக்கூடம் ஒன்றும் ஏற்படுத்தியுள்ளார். கடைசியாக இவ்வாண்டு மார்ச்சு மாதத்தில் வியாபார கலாசாலை ஒன்று அமைப்பதற்காகப் பெரிய மாளிகை ஒன்றை ஈந்தார். இவையல்லவோ உண்மை அறங்கள்? இத்தரும சீலரின் மரணங்குறித்துப் பெரிதும் துயருறுகிறோம்.

இங்கிலாந்தில் நிறத்துவேஷம்

இங்கிலாந்தில் லீட்ஸ் என்னும் நகரம் ஒன்றிருக்கிறது. இந்நகரசபையில் டாக்டர் பெர்னாண்டஸ் என்னும் இந்தியர் எவ்வாறோ க்ஷயரோக நிபுணர் உத்தியோகம் பெற்றிருந்தார். இவரை இப்பதவியினின்றும் கிளப்ப நகரசபை அங்கத்தவரில் ஒரு சாரார் நீண்ட நாளாக முயற்சி செய்து வந்தனர். ஆனால் தொழிற் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்நகர சபையில் பெரும் பான்மையோராயிருந்ததால் இம்முயற்சியைத் தகைந்து வந்தனர். முன்னவர் வாளாவிருக்க வில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சுகாதார மந்திரிக்கு இது சம்பந்தமாக எழுதினர். அம்மந்திரி மேற்படி இந்தியரை ராஜீனாமாச் செய்யச் சொல்லவேண்டுமென்று சிபார்சு செய்தாராம். அதன் மேல் நகரசபை டாக்டர் பர்னாண்டஸை ராஜீனாமா செய்யும்படி கேட்டிருக்கிறதென "பார்வர்ட்" பத்திரிகைக்கு வந்த செய்தி யொன்று கூறுகிறது. சென்ற நூற்றைம்பது ஆண்டுகளில் ஆயிரக் கணக்கான ஆங்கிலேயர் இந்தியாவில் பெரிய பெரிய உத்தியோகங்களை வகித்துக் கொழுத்த பணத்துடன் திரும்பிச் சென்றிருக்கின்றனர். ஆயினும் இந்தியர் ஒருவர் இங்கிலாந்தில் உத்தியோகம் வகித்தது அங்குள்ள ஆங்கிலேயருக்குச் சம்மதமாயில்லை. இந்நிறத்துவேஷ மனப்பான்மைக்கு, சுகாதார மந்திரி மூலம் அரசாங்கமும் ஒப்பம் வைத்திருக்கிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அளவற்ற பக்தியுடையவர்களுக்குங் கூட அதனிடம் வெறுப்பு உண்டாக்கத் தக்கனவாகும்.

காந்தியடிகள்

உண்மையோடியைந்த வாழ்வு

பாகம் 4. அத்தியாயம் 8.

ஓர் எச்சரிக்கை

முன் அத்தியாயத்தில் போலவே இதிலும் சரிதத்தொடர்ச்சியை விட்டு வேறு விஷயங்களைப்பற்றி எழுத வேண்டியவனாயிருக்கிறேன். மண்சிகிச்சை முறையில் சோதனை நடத்திக்கொண்டிருந்த காலத்திலேயே, உணவு முறைச் சோதனைகளும் நடத்திக் கொண்டிருந்தேன். இவ்விரு வகைச் சோதனைகளைப்பற்றியும் பின்னால் குறிப்பிட வேண்டி யிருக்குமாயினும், உணவுப் பரிசோதனைகளைப்பற்றி இங்கே சில மொழிகள் கூறுதல் பொருத்தமற்றதாகாது.

ஆனால் என் உணவுப் பரிசோதனைகளைப் பற்றி இப்போதோ பின்னரோ விரிவாக எழுதப் போவதில்லை. பல வருஷங்களுக்கு முன்பே நான் குஜராத்தியில் எழுதிய சில கட்டுரைகளில் அவற்றைப்பற்றி விவரித்து விட்டேன். அக்கட்டுரைகள் "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையில் வெளியாயின. பின்னர் அவைகளே "சுகவழி" என்ற பெயருடன் புத்தக வடிவில் வெளியிடப்பட்டன. என்னால் எழுதப்பட்ட சிறு நூல்களுள் மேனாட்டிலும்சரி, கீழ்நாட்டிலும்சரி, மிகப் பலரால் படிக்கப்பட்ட புத்தகம் இதுவேயாகும். இதன் இரகசியம் இன்னதென்று இன்றளவும் நான் கண்டுபிடிக்க முடியவில்லை. "இந்தியன் ஒபீனியன்" பத்திரிகையின் நேயர்களுக்கென்றே அது எழுதப்பட்டது. ஆனால் மேனாட்டாரிலும் கீழ்நாட்டாரிலும் அப்பத்திரிகையைக் கண்ணாலும் பார்த்திராத அநேகருடைய வாழ்வு முறையை அது பெரிதும் மாற்றியமைத்து விட்டது என்று நானறிவேன். அவர்கள் இவ்விஷயமாக என்னுடன் கடிதப் போக்குவரவு நடத்திவருகிறார்கள். ஆதலின் அப்புத்தகத்தைப்பற்றி இங்கே சிறிது கூறுவது அவசியமாயிற்று. அதிலே நான் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களை எள்ளளவும் மாற்றுவதற்குக் காரணம் எதுவும் எனக்குப் புலப்படவில்லையாயினும், வாழ்வு நடைமுறையில் சில முக்கியமான மாறுதல்களைச் செய்துவிட்டேன். புத்தகம் படித்தவர்கள் எல்லாரும் அம்மாறுதல்களைப் பற்றி அறியார்களாதலின் அவற்றைஇங்கே குறிப்பிடுதல் அவசியமென்று கருதுகிறேன்.

மனிதனுக்கு ஏற்ற உணவு

நான் எழுதுவன எல்லாவற்றையும்போல் அப்புத்தகமும் ஆன்மார்த்த நோக்கத்துடனேயே எழுதப்பட்டது. என்னுடைய செயல் ஒவ்வொன்றும் அத்தகைய நோக்கங்கொண்டதே யாகும். ஆதலின் அப்புத்தகத்தில் கூறியுள்ள சில சித்தாந்தங்களை வாழ்க்கையில் அனுசரிக்க முடியாதிருப்பது எனக்கு அளவற்ற மனத்துயரை யளிக்கிறது.

மனிதன் குழவியாயிருக்கும்போது அருந்தும் தாய்ப்பாலையன்றி வேறு பால் எதுவும் அருந்த வேண்டுவதில்லை யென்பது என் உறுதியான கொள்கையாகும். வெயிலினால் பக்குவமான பழங்கள், கொட்டைகள் இவற்றையன்றி மனிதன் வேறு உணவு அருந்தலாகாது. திராட்சையைப் போன்ற பழங்களிலிருந்தும், வாதாமியைப் போன்ற கொட்டைகளி லிருந்தும் தசைக்கும், நரம்புக்கும் வேண்டிய போஷணையை அவன் பெறலாம். இத்தகைய உணவருந்தி வாழ்பவனுக்கு, காமம் முதலிய தீக்குணங்களை அடக்குதல் எளிதாயிருக்கும். "மனிதன் தின்பதுபோல் ஆகிறான்" என்னும் பழமொழியில் நிரம்ப உண்மையுண்டென்று நானும் என் சகாக்களும் அநுபவத்திலிருந்து அறிந்திருக்கிறோம். இக்கருத்துக்கள் மேற்படி புத்தகத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

விரத பங்கம்

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில், வாழ்க்கை நடைமுறையில், என் கொள்கைகள் சிலவற்றை நானே மறுக்கும்படி நேர்ந்திருக்கிறது. ஐரோப்பிய மகாயுத்தத்துக்கு ஆள்திரட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது, உணவில் சிறிது முறைபிறழ்ந்துவிட்டதன் பயனாய் நோய் வாய்ப்பட்டு நமனுடன் மன்றாடும் நிலைக்கு வந்துவிட்டேன். இதனால் பெரிதும் மெலிந்துபோன உடம்பைப் பால் அருந்தாமலே தேற்றிக்கொள்ள முயன்றேன். எனக்குத்தெரிந்த டாக்டர்கள், வைத்தியர்கள், விஞ்ஞானப்புலவர்கள் அனைவரையும் பாலுக்குப் பதிலாய் அதைப்போல் சத்துள்ள பொருளொன்றைத் தெரிந்து சொல்லும்படி வேண்டிக் கொண்டேன். வாதாங்கொட்டைப் பால் முதலிய சிலவற்றைச் சிலர் குறிப்பிட்டார்கள். இவற்றைச் சோதித்துச் சோதித்து என்உடல் நிலையை இன்னும் கேவலமாக்கிக் கொண்டேனேயல்லாமல் நோய்ப்படுக்கையினின்று எழுந்திருக்க வழியைக் காணோம். வைத்தியர்கள் சாரகரின் வைத்திய சாஸ்திரத்திலிருந்து சுலோகங்களைப்படித்துக் காட்டினார்கள். நோயாளிக்கு உணவு கொடுக்கும் விஷயத்தில் மதக்கோட்பாடுகளைக் கவனிக்கக்கூடாது என்று அவை கூறின. எனவே பாலருந்தாமல் வாழ்க்கை நடத்துவதற்கு அவர்கள் எனக்கு உதவி செய்தல் எங்ஙனம்? அல்லது, பிராந்தியும் மாட்டிறைச்சியும் அருந்தும்படி தயக்கமின்றி யோசனை சொன்னவர்கள்தான் எனக்கு இவ்விஷயத்தில் எப்படி உதவி செய்யப் போகிறார்கள்?

பசுவின் பாலாவது, எருமைப் பாலாவது அருந்துவதில்லையென்று நான் விரதம் பூண்டிருந்தேன். இவ்விரதத்தின் கருத்து எந்தப் பாலும் அருந்தக் கூடாது என்பதேயாகும். ஆனால் விரதம் எடுத்துக் கொண்டபோ[illegible] எருமையுமே என் [illegible]லும், இப்[illegible]வரும்பிய படியாலு[illegible] மனதைத் திருப்தி செய்துகொண்டு ஆட்டின் பால் அருந்துவதென்று தீர்மானித்தேன். இவ்வாறு ஆட்டுப்பால் அருந்தத் தொடங்கியபோது விரதத்தின் எழுத்தைக் காப்பாற்றினேன் என்றாலும், உண்மையில் விரதபங்கம் செய்துவிட்டேனென்று உணர்ந்தே யிருந்தேன்.

உயிர்வாழும் ஆசை

அப்போது, ரவலட் சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டுமென்னும் எண்ணம் என்னைப்பற்றியிருந்தது. இதனால் உயிர் வாழ வேண்டுமென்னும் ஆசையுமிருந்தது. இவ்வாசை காரணமாய், என் வாழ்க்கையில் மிகப்பெரிய சோதனைகளில் ஒன்று இடையில் தடைப்படலாயிற்று.

"ஆன்மாவுக்கும் உண்ணல், குடித்தலுக்கும் சம்பந்தமில்லை. ஆன்மா உண்பதுமில்லை; குடிப்பதுமில்லை. வெளியிலிருந்து உள்ளே செலுத்துவது எது என்பது முக்கியமன்று. உள்ளிருந்து வெளியே வருவதே பிரதானம்" என்பது போன்றவாதங்களை நான் அறிவேன். இவ்வாதத்தில் ஓரளவு பொருளுண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதுகுறித்து நான் விவாதிக்கப் போவதில்லை. அதற்குப் பதிலாக என்னுடைய உறுதியான அபிப் பிராயத்தைக் கூறிவிட்டுத் திருப்தியடைவேன். அதாவது:— ஆண்டவனுக்குப் பயந்து நடந்து, அவனை நேருக்கு நேர் காண விரும்புவோனுக்கு, எண்ணத்தையும், பேச்சையும் கட்டுப்படுத்தல் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உணவின் குணத்திலும் அளவிலும் கட்டுப்பாடு செய்தல் அவசியமாகும்.

பாலைப்போன்ற உணவு வேறுண்டா?

ஆனால், என்னுடைய சித்தாந்தத்தை நானே நடத்திக் காட்ட முடியாதிருக்கும் ஒரு விஷயத்தில், அச்சித்தாந்தத்தைத் தெரிவிப்பதுடன் அதை ஏற்றுக் கொள்வது குறித்து எச்சரிக்கை செய்யவும் நான் கடமைப் பட்டிருக்கிறேன். என் சித்தாந்தத்தின் பலத்தைக்கொண்டு பாலருந்துவதை நிறுத்தியவர்கள், எல்லாவகையிலும் அதனால் அவர்களுக்கு நன்மை உண்டாயிருந்தாலன்றி அச்சோதனையை விட்டுவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். அல்லது அநுபவமுள்ள வைத்தியர்கள் யோசனை கூறினால் அவர்கள் பாலருந்தாமலிருக்கலாம். இதுவரையில் என்னுடைய அநுபவத்தினால் நான் தெரிந்து கொண்[illegible]ருப்பது, ஜீரண சக்தி குறைவானவர்களு[illegible] படுத்த படுக்கையா யிருப்பவர்களுக்[illegible]. பாலைப்போல் எளிதில் செரிக்கக்கூடிய[illegible], சத்துள்ளது மான உணவு வேறில்லை[illegible]ன்பதேயாகும்.

இவ்வத்தியாயத்தை[illegible] படிப்பவர்களில் இத்துறையில் அநுபவ[illegible]வர்கள் யாரேனும், பாலைப்போல் [illegible]தில் சீரணிக்கூடியதும், சத்துள்ளது[illegible] தாவர உணவுப் பொருளை அறிந்திரு[illegible] அவர் எனக்குஎழுதித் தெரிவித்த[illegible] மிக நன்றியுள்ளவனாயிருப்பே[illegible]னால். அது புத்தகத்தில் படித்துத்[illegible]தாந்து கொண்டதாயிராமல் சொந்த [illegible]பவத்தில் அறிந்ததாயிருக்க வேண்டும்.

நோகாலி ஜில்லா மாஜிஸ்ட் ரேட்டை அவர் வளர்த்த நாயே கடித்து விட்டதாம்.

o o o

கும்பகோணத்தில் ஒரு கிழவனுர் சென்ற வாரம் இறந்து போக, அவர் மனைவியும் உடனே குளத்தில் விழுந்து மாண்டாளாம்.

o o o

திருவாங்கூர் அரசாங்க ஆயுர் வேத சாத்திரப் பரீட்சையில் நாயர் வகுப்பைச் சேர்ந்த ஸ்ரீமதி சுபத்திரை அம்மாள்வெற்றி பெற்றுராம்.

o o o

தூத்துக்குடியை அடுத்த மீள விட்டானில், ஒரு கிறிஸ்தவ சாமியார் மரத்தடியில் இருந்து பல நோய்களை மந்திரத்தால் தீர்த்து வருகிருராம்

o o o

அலெக் சாண்டிரா தினத்தன்று செயற்கை ரோஜாப் பூக்களின் விற்பனையால் லண்டன் ஆஸ்பத்திரிகளுக்கு 50,000 பவுன் வசூலாயிற்றும்.

o o o

மகாத்மாவின் வருகையின்போது அவருக்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுப்பதெனச் சேலம் தாலூக்கா போர்டார் தீர்மானித்திருக்கின்றனர்.

o o o

அயர்லாந்து அரசாங்கத்தின் உப அக்கிராசனரான மிஸ்டர் கெவின் ஓ ஹிக்கின்ஸ் என்பார் தெருவில் நடந்துகொண்டிருக்கையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

o o o

பம்பாயில் ஒரு கைதியைக் கோர்ட்டு விசாரணைக்குக் கொண்டு வரும்போது சார்ஜண்ட் ஏதோ திட்டினராம். கைதி கோபமுண்டு சார்ஜண்டை அடித்து விட்டானும்.

o o o

குஜராத்தி மாகாண காங்கிரஸ் கமிட்டியும் சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டியும் வரும் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு டாக்டர் அன்சாரியைச் சிபார்சு செய்திருக்கின்றன.

o o o

இராஜாங்க சபையில் பொப்பிலி மகாராஜா வகித்திருந்த அங்கத்தவர் பதவியினின்றும் விலகிவிட்டமையால் அப்பதவிக்கு ராவ்பகதூர் ஜீ. ஏ. நடேசன் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

o o o

இலங்கையிலுள்ள அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மகாத்மாகாந்தி அடுத்த செப்டம்பர் மாதம் இலங்கைக்குச் செல்வாரென்று இலங்கைப் பத்திரிகை யொன்று தெரிவிக்கிறது.

o o o

சென்ற 6-ந்தேதி தென் இங்கிலாந்திலும் வடபாரிஸிலும் கடும்புயலும் பெருமழையும் அடித்தனவாம். டோவரில் மின்னிய மின்னல் அங்கிருந்து பிரஞ்சுக் கடற்கரை தெரியும்படி செய்ததாம்.

o o o

திருவண்ணமலைப் பெரியாரான ஸ்ரீகாவிய கண்ட கணபதி சாஸ்திரிகள் வட நாட்டில் இந்து தர்மப்பிரசாரஞ் செய்துவிட்டு மகா முனியென்ற பட்டத்தைப் பெற்றுத் திரும்பி வந்திருக்கிருராம்.

o o o

ஜெர்மன் பார்லிமெண்டு சபையில் சில தினங்களுக்கு முன் தேசியக் கட்சியினருக்கும் அபேத வாதிகளுக்கும் ஏற்பட்ட வாய்ச் சண்டை கைச்சண்டையாக மாறியதில் பலர் காயமடைந்தனராம்.

o o o

இவ்வாண்டு சென்னையில் கூடப் போகும் காங்கிரஸ் காரியங்களைக் கவனிப்பதற்கு சென்னை மலைச்சாலையிலுள்ள மகாஜன சபையில் உபசாரணைக்கமிட்டியின் காரியாலயம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

o o o

தைப்பிங் நகரில் சமீபத்தில் திருப்பணி வேலைசெய்து முடிவுபெற்ற ஸ்ரீ நவநீத கிருஷ்ணசுவாமி கோயிலுக்கு ஆனிமீ 27உ மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

o o o

கான்பூரில் 65 வயதுள்ள ஓர் இந்துக் கிழவர் 9 வயதுப் பெண்ணை மணக்க ஏற்பாடாயிருந்ததாம். தாலிகட்டுந் தருணத்தில் ஆங்கிருந்த அறிவாளிகள் மணம் நிகழவொட்டாது தடுத்து விட்டார்களாம்.

o o o

ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்க மூன்ருவது ஆண்டு நிறைவு விழா. நாளது பிரபவஞு ஆடிமீ 2உ டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெறுமென்று அறிவிக்கப்படுகிறது.

o o o

காலஞ் சென்ற மகாபால கிருஷ்ண கோகலே, ரவீந்திர நாதாகூர் கவிகளை வங்காளி மொழியிலேயே படித்து அவற்றின் சுவையை அநுபவிப்பதற்காகவென்று வங்காளி மொழி கற்றுக்கொண்டாராம்.

o o o

கொச்சியில் இரண்டு பெண்டாட்டி யுடைய ஓர் ஈழவன் தனது இளைய மனைவி மூத்த மனைவியின் குழந்தைகளைக் கஷ்டப்படுத்துவதைப் பொருது அக்குழந்தைகளுடன் ஆற்றில் குதித்து இறக்க முயன்றுனும்.

o o o

பிரான்சில் லையான் சர்வ கலாசாலையில் பரீட்சை முடிவுகளை அதிகாரிகள் வெளி

கலம்பகம்

யிடச் சிறிது தாமதமானதால் ஆத்திரமடைந்த மாணவர்கள் கலகஞ் செய்தார்களாம். போலீசார் வந்து நாலு பேரைக் கைதி செய்தார்களாம்.

o o o

எல்லா சமஸ்தான உத்தியோகஸ்தர்களும் ஒரு மாத காலத்துக்குள் ஹிந்தி பாஷையைக் கற்கவேண்டுமென்றும் அப்படிக் கல்லாதவர் வேலையினின்றும் நீக்கப்படுவரென்றும் ஆள்வார் மகாராஜா ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

o o o

நீதிபதிகளும் மாஜிஸ்ட் ரேட்டுகளும் கோர்ட்டில் அமரும்போது ஒவ்வொரு நாளும் பட்ச பாதமின்றி நடுநிலைவகித்து நீதிவழங்குவதாகப் பிரமாணஞ் செய்ய வேண்டும் என பர்மா சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறதாம்.

o o o

ஹைதராபாத்தில் ஒரு பெரிய குடும்பத்தில் வேலைகாரனு யிருந்த முஸ்லிம் வாலிபன் ஒருவன் 50,000 ரூபா பெறும்படியான நகையணிந்திருந்த தனது எஜமானின் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்க் கலியாணம் செய்து கொண்டானும்.

o o o

கல்கத்தா போலீஸ் கோர்ட்டு வக்கீல் ஒருவரிடம் அவரது நண்பர் ஒருவர் 35,000 ரூபா கொடுத்து அதைத் தகுந்த வட்டிக்கு விட்டு வைக்கும்படி கூறினராம். வக்கீல் அதைச் சொந்த உபயோகப்படுத்திக் கொண்டதால் கைது செய்யப்பட்டுள்ளார்.

o o o

பவேரியா பாதிரிமார் பெண்கள் பொது ஸ்தலங்களில் நீந்துவதும் பந்தய விளையாட்டுகள் புரிவதும் சன்மார்க்கத்துக்கு ஏற்றதல்லவென்று கூறிப் பெண்கள் இனி அவ்வித விளையாட்டுகள் செய்யக்கூடாதெனத் தடையுத்தரவு செய்திருக்கின்றனராம்.

o o o

நாகையிலிருந்து திருவாரூருக்கு ரயிலில் போய்க் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி என்ற ஒருவன் அடியக்கமங்கலத்தில் வந்து வண்டியேறிப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு மகமதியர் விரலிலிருந்து மோதிரத்தை மெதுவாகக் கழற்றி விழுங்கி விட்டானும்.

o o o

பம்பாய் அரசாங்கத்தாரால் சிந்துவில் கால் நடைகள் களவு போவது குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட கமிட்டியார் ஆங்கு ஆண்டொன்றுக்கு 20,000 கால் நடைகள் களவு போகின்றனவென்றும் இதனுல் இருபது லட்ச ரூபா நஷ்டமுண்டாகிறதென்றும் அறிக்கை யிட்டனர்.

o o o

கூடலூர் ஸ்ரீ இராமலிங்க பக்தஜனசபையில் நிகழும் பிரபவஞு ஆனிமீ 19உ (3-7-27) ஆதிவாரத்தன்று ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளின் அவதார திருநட்சத்திர வருட மகோற்சவம், ஸ்ரீ இராமலிங்க பக்த பாலஜன சங்கத்தினரால் மிகவு சிறப்பாக நடத்தப்பட்டது என்று காரியதரிசி தெரிவிக்கிருர்.

o o o

நாகர் கோயிலை அடுத்த பள்ளியாடியில் கிறிஸ்தவ நாடார் ஒருவர் தமது மகளைத் தமது மருமகனுக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்தாராம். பின் எக்காரணத்தாலோ மறுத்து விட்டாராம். அதனுல் கோபமடைந்த மருமகன் மாமனைக் குத்திக்கொன்று விட்டானும். இந்த வழக்கு நாகர் கோயிலில் நடக்கிறது.

o o o

ஸ்ரீமான்கள் ஜிதேந்திரலால் பானர்ஜி, ஸாஸ்மால் முதலியோரால், கல்கத்தாவில காங்கிரஸ் குடியரசுக்கட்சி என ஒரு புதுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் பூரண சுதந்திரம் அடையவும் வயது வந்த அனைவரும் வாக்குரிமை பெறவும் நாட்டைச் சட்டமறுப்புக்குத் தயாராக்கவும் பாடுபடுவார்களாம்.

o o o

கொழும்பு மாஜிஸ்ட்ரேட் முன் சென்ற 29-ந் தேதி ஒரு கொலை வழக்குக்கொண்டு போகப்பட்டதாம். அதில் இறந்துபட்டவன் பெயரும் சேர்க்கப்பட்டிருந்ததாம். விசாரணையில், "இது சிக்கலான வழக்கானமையால் குழப்பம் நேராதிருக்க இறந்தவன் பெயரும் சேர்க்கப்பட்டது" எனப்போலீஸ் இன்ஸ்பெக்டர் கூறினராம்!

o o o

லஹூதாராபாத்தில் சென்ற 7-ந் தேதி 60 வயதுடைய நாஸிர் என்றவன் ஒரு மார்வாடிக் கடையில் நகையை விற்க பேரம் பேசிக் கொண்டிருக்கையில் மார்வாடி ஏதோ தூஷணையாகக் கூறினனும். நாஸிர் அதைப் பொருமல் கத்திகொண்டு மார்வாடியை மார்பில் குத்திக் கொன்றுனும். உதவிக்கு வந்த மற்ருெருவரும் காயமடைந்தாராம்.

o o o

சென்ற 4-ந் தேதி பம்பாய் கோர்ட்டில் நடந்த ஒரு வழக்கில் ஓர் ஊமை சாட்சியாக விசாரிக்கப்பட்டாராம். அந்த ஊமையின் சைகையை ஜூரர்களுக்கும் நீதிபதிகளுக்கும் தெரிவிக்கத் தனியாக ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாராம். ஊமை ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளிக்கும்போது கோர்ட்டிலிருந்தவர் அனைவரும் நகைத்த வண்ணமே யிருந்தனராம்.

o o o

மாசி கம்பெனி வேலை நிறுத்தமும் டயோஸிஸன் அச்சுக்கூட வேலை நிறுத்தமும் சீக்கிரத்தில் முடிவு பெருவிட்டால் சென்னை நகரில் பொது வேலைநிறுத்தம் ஏற்பாடு செய்வதுபற்றித் தொழிலாளர் தலைவர்கள் யோசனைபுரிந்து வருவதாகத் தெரிகிறது. தலைவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை தொழிற் கமிஷனரை இது விஷயமாகப் பேட்டி கண்டார்கள்.

o o o

ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் (17-7-27) ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்குச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிமண்டபத்தில் "ஜீவகாருண்யம்" என்பது பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அதுபோது திவான்பகதூர் சர். டி சதாசிவ ஐயர் அவர்கள் தலைமை வகிப்பார்கள் எனச் சென்னைப் புலால் மறுத்தல் சங்கக் காரியதரிசி தெரிவிக்கிருர்.

o o o

திருமங்கை நகர் எனும் பேட்டை திருஞானசம்பந்தர் திருவருட்கழக முதல் ஆண்டு நிறைவுவிழா ஆனிமீ 29,30உகளில்பேட்டை ஸ்ரீ பால்வண்ணநாதர் ஆலயத்திற்குத் தென் புறம்அமைத்திருக்கும்கொட்டகையில் கொண்டாடப்பெறும். ஸ்ரீபஞ்சாக்கரபுரம் ஸ்ரீமத் வாலையானந்த சுவாமிகள் தலைமை வகிப்பார்கள். அறிஞர் பலர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

o o o

மகாத்மாகாந்தியின் தென்னுட்டு யாத்திரைக்காகச் சென்னை அடிசன் கம்பெனியில் தயாரான புதுமையான டாட்ஜ் மோட்டார் வண்டி பெங்களூர் போய்ச் சேர்ந்துவிட்டதாம். கதர்க்காட்சியைக் காணவந்த ஜனங்களெல்லோரும் அதனைக் கண்டு மகிழ்ந்தார்களாம். அவ்வண்டியில் மகாத்மாவுக்கு இருக்கவும், படுக்கவும், எழுதவும், நூல் நூற்கவும் இன்னும் பல வசதிகளும் அமைந்திருக்கின்றனவாம்.

o o o

ஜூன் மீ 15 உ டார்ஜிலிங்கில் மகிளா சமிதியைச் சேர்ந்த பெண்மணிகளால் தேசபந்து தினம் கொண்டாடப்பட்டதாம். அதிகாலை பேசிய தேசபந்து வின் சகோதரியான ஸ்ரீமதி ஊர்மிளாதேவி, தேசபந்துவுக்குச் செலுத்தக்கூடிய சிறந்த நன்றி கதரணிதலும் நூல் நூற்றலுமேயாகும் என்று கூறினராம். அதன் மேல் ஒன்பது பெண்மணிகள் தினம் அரைமணி நேரம் நூல் நூற்கும் விரதம் எடுத்துக் கொண்டார்களாம்.

o o o

நாளது 15-ந் தேதி இரவு திரு - ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் ஈரோட்டிலிருந்து புறப்பட்டு திரிச்சி வழியாகக் காரைக்குடிக்கு 16-ந் தேதியன்று விஜயமாவார். 16-ந் தேதி முதல் 22-ந் தேதி வரையில், கானுடுகாத்தான், பள்ளத்தூர், சிராவயல் முதலிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்வார். 22,23-ந் தேதி வாக்கில் புறப்பட்டு திரிச்சி மார்க்கமாய் ஈரோட்டுக்குப் பிரயாணமாவார் என்று அறிவிக்கப்படுகிறது.

o o o

கல்கத்தாவில் ஒரு வீட்டில் மூன்று கொள்ளைக்காரர்கள் புகுந்தார்கள். இருவரிடம் ஈட்டிகள் இருந்தன. ஒருவனிடம் துப்பாக்கி யிருந்தது. கள்வனுடன் கணவன் போராடுகையில் மனைவி அவனிடம் இருந்த ஈட்டியைத் துணிவுடன் பிடுங்கிக்கொண்டாளாம். அடுத்த அறையில் படுத்திருந்த கணவனின்தகப்பனும் சகோதரனும் வந்து திருடனைப் பிடித்துவிட்டார்கள். இதுபற்றிய வழக்கு விசாரணையில் நீதிபதி அம்மாதின் துணிவைப் போற்றினர்.

o o o

காரைக்குடியில் காலஞ்சென்ற வேங்கடாசலஞ் செட்டியாரின் ஒரே பிள்ளையான இருபத்திரண்டு வயதுள்ள பழனியப்ப செட்டியார் சென்ற செவ்வாய் காலையில் திருக்குற்றாலத் தருவியில் தமது நண்பர் ஒருவருடன் நீராடிக்கொண்டிருந்தபொழுது, கால் வழுக்கிப் பக்கத்திலிருந்த ஆழமான கசத்தில் விழுந்து விட்டாரென்னும் துயரகரமான செய்தி கிடைத்திருக்கிறது. சிங்கம்பட்டி ஜமீன்தார் தமது ஆட்களைவிட்டு எவ்வளவோ தேடியும் பிரேதம் அகப்படவில்லையாம்.

o o o

சில தினங்களுக்கு முன் இலங்கை அநுராதபுரம் பகுதியில் ஐரோப்பியர்களான நாலு ஆடவர்களும் இரண்டு மாதர்களும் ஒரு மோட்டார் வண்டியில் வேட்டையாடப் போனர்களாம். ரஸ்தாவில் ஒரு சிறுத்தைப் புலி நின்றது. ஆனல் ஆடவர்கள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்களாம். அதனைக் கண்ட வண்டி முன் இருந்த மிஸ் ப்னோரன்ஸ் என்ற மாது ஒரு துப்பாக்கியை எடுத்து அதன் நெற்றியில் குறிவைத்தாள். முதல் குண்டிலேயே புலி உயிரிழந்தது.

o o o

சென்ற வாரம் கல்கத்தா டைமண்ட் ஆர்பரிலுள்ள ஒரு வீட்டில் 12 கொள்ளைக் காரர்கள் புகுந்தனராம். அவர்களை எதிர்த்த அவ் வீட்டிலுள்ள ஆண்களைக் காயப்படுத்தி விட்டு அங்கு ஒரு தாய் வைத்திருந்த குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு ஸ்திரீகள் அணிந்திருக்கும் நகைகளைக்கொடாவிடின் குழந்தையைத்தரையில் அடித்துக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினராம். தாய் குழந்தையின் அபாயத்தைக் கருதி நகைகளை யெல்லாம் கழற்றிக் கொடுத்து விட்டாளாம். கள்ளர்கள் வீட்டிலுள்ள மற்றப் பொருளையும் கொள்ளையிட்டுச் சென்றுர்களாம்.

o o o

திரிச்சி தாலூகா காங்கரஸ் கமிட்டியின் வருங்கால வேலைகளைக் குறித்துத் தீர்மானிக்கவும், வரவு செலவுக் கணக்கு, மகாத்மா வருகை ஆகியவிறவற்றைக்குறித்து ஆலோசிக்கவும் கூட்டம் தமிழ் நாட்டுக் காங்கரஸ் கதர் டெப்போவில் 17-7-27 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்குக் கூடும். 1927-28 வருடத்திய தேர்தலில் கலந்து கொள்ளவிரும்பும் அன்பர்கள் விரைந்து என்னிடத்திலாவது, தலைவர் திருமிகு வேணு கோபால் நாயுடு, உதவித் தலைவர் திரு ச. ம. சி. பரமசிவம் செட்டியார் ஆகியவர்களிடமாவது அங்கத்தினர்களாகச் சேர்ந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன் என்று காரியதரிசி ஸ்ரீ மே. வே. துரைசாமி தெரிவிக்கிருர்.

o o o

வங்காளத்தின் பிரபல காங்கிரஸ் வாதிகளில் ஒருவரான ஸ்ரீ ஜிதேந்திரலால் பானர்ஜி அடியிற் கண்டவர்களடங்கிய ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டால் இந்தியர்கள் திருப்தியடையலாமென்று யோசனைசொல்லியிருக்கிருர் :—கமிஷன் தலைவர் : ஏர்ல் ஆப் ஆக்ஸ் போர்டு, அல்லது மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டு அல்லது லார்டு ஹீவர்ட்டு. ஹிந்துக்கள்: 1 ஸ்ரீனிவாச சாஸ்திரி, 2. என். வி. கேல்கர், 3. பண்டித மோதிலால் நேரு, அல்லது கனம் படேல், 4. பண்டித மதன் மோஹன மாளவியா. முகம்மதியர்கள் : 1. ஸர் முகமத் ஹபிபுல்லா, 2. மௌலான முகமதலி அல்லது டாக்டர் அன்ஸாரி, 3. எம். ஏ ஜின்ன. ஐரோப்பியர்கள்: 1. ஸர் வில்லியம் வின்செண்டு, 2 ஸர் வில்லியம் மாரிஸ் அல்லது ஸர் காம்பல் ரோட்ஸ், 3. லார்டு ரொனல்டு ஷே.

o o o

சென்ற புதனன்று சென்னைச் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கண்மையில் ஒரு ஸ்திரீ சுரத்தால் வருந்திக்கொண்டு ஒரு குழந்தையுடன் நின்றிருந்தாளாம். ஆங்கு ஒருவன் தோன்றி ஏதேனும் உதவி வேண்டுமோவெனக் கேட்டானும். ஆயிரம் விளக்குக்குச் செல்ல வண்டி யமர்த்தித் தந்தால் போதும் என அவள் கூறினளாம். அவன் வண்டி யமர்த்திக் கொடுத்துத்தானும் அதில் ஏறிக் கொண்டானும். வண்டி சிறிது தூரம் சென்றதும் நோய்க்கு மருந்து கொடுப்பதுபோல் ஒரு கறுப்புப் பொடியைக் கொடுத்து மயக்க முறச்செய்து அவள் நகைகளையும் குழந்தை நகைகளையும் கழற்றிக்கொண்டு வண்டிக்காரனிடம் வண்டியை மெல்லவிட்டுப் போகும்படியும் ஒரு ஜோலியைப் பார்த்துக் கொண்டு சிறிது தூரத்தில் வந்து வண்டியுடன் கலந்து கொள்வதாயும் கூறிவிட்டு ஓட்டம் பிடித்தானும். போலீசார் இச்சோக்குப் பொடிக் கள்வனைப் பிடிக்க முயன்று வருகின்றனர்.

இல்லறம்

கூண்டில் அடைபட்ட குருவிகள்

"கிரகஸ்தன்" எழுதுவது

விவாகம் ஆகிவிட்டது. இனி, தம்பதிகள் இல்லறம் நடத்துவதில் ஏற்படும் தொல்லைகளைப்பற்றிக் கூறுவோம். நமது நாட்டில் குடும்பக் கவலைகளைப்பற்றி வெளியில் அதிகமாகப் பேசுவதில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் விவாகம் செய்துகொண்ட இளைஞர்களும்பெண்களும் படும்கஷ்டத்தை விவரிப்பதானுல் அதற்கென ஒரு தனிப் பத்திரிகை ஏற்படுத்தினுலும் போதாது. சுதந்திரம் அளவு கடந்து வழங்கப்படும் அமெரிக்க நாட்டில் குடும்பக் கவலைகளைத் தீர்த்து வைக்கத் தயாராயிருக்கும் ஒரு பத்திரிகாசிரியருக்கு ஒரு வருஷத்துக்கு 10 ஆயிரம் கடிதங்கள் வருகின்றனவாம். இவ்வாயிரக்கணக்கானவர்களுக்கும் அவர் புத்திமதி சொல்லித் துயரப்பட்ட மனமுள்ளவர்களுக்கு மனச்சாந்தியுண்டாக்குகிருராம்.

நமது நாட்டில் முக்கியமாகப் பெண்களுக்கு இல்வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைக் கணக்கிட முடியாது. நமது ஸ்திரீகள் பொறுமையின் வடிவங்கள். எக்கஷ்டம் வந்தாலும் வாய்திறவாமல் சகிப்பதை ஒரு பாடம்போல் கற்றிருக்கிருர்கள். அவர்கள் கஷ்டத்தைப் பெற்ற தாய்களிடம் தான் சொல்லுவார்கள். தாய் வீட்டிற்கு அடிக்கடி போகும் பாக்கியம் பெருதவர்கள் தனிமையில் உட்கார்ந்து கண்ணீர் வடித்து இயற்கைத்தாயிடம் முறையிட்டுக் காலமுழுவதும் கழிக்கின்றுர்கள்.

நாட்டிலுள்ள பெரியோர்கள் நமது உயர்வுக்கு அடிப்படையாயிருக்கிற வீட்டுக்கையைப் பற்றிச் சிறிதும் சிந்திப்ப... ...லத்தில் இன்பத்துடன் வாழ... பவ... ...லட்சியங்களைக் கவ... துறைகளிலும ... வரலாம். பத்திரிகைகள் மூலம... வாழ்க்கையில் துன்பப்படுகிறவர்களின் கஷ்டங்களைப்பற்றித் தெரிவித்துக் கொண்டால் அவர்களுக்குத் தகுந்த ஆறுதல்கள் சொல்லவோ, அவர்களுடைய கஷ்டங்களைப் போக்கும் வகை கூறவோ பத்திரிகாசிரியர்கள் தயாராயிருந்தால் அவர்கள் நாட்டுக்குப் பெருந்தொண்டு செய்தவர்கள் ஆவார்கள்.

நம்மவர்கள் மனிதர்களின் தனி வாழ்வைச் சீர்படுத்த முயலுவதில்லை. இம்முயற்சியின்றிப் பொது வாழ்வை மேம்படுத்த முந்துவதால் தகுந்த பயன் விளையாது. விவாகம் செய்துகொண்டவுடன் புருஷன் மனைவியுடன் பேசுவதற்கும், மனைவி புருஷனுடன் வார்த்தையாடுவதற்கும் கஷ்டப்படுவது இயல்பு. அவர்கள் சுகமாக வாழ்ந்து ஒற்றுமையாய் இருக்க வேண்டுமாயின் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிப் பழகச்சந்தர்ப்பம் வேண்டும். ஆனல் நமது நாட்டில் பெண் புருஷன் வீட்டிற்கு வந்தவுடன் அவர்கள் இதுகாறும் விளையாடி வந்த விளையாட்டுகளும், களிப்பும், ஆனந்தமும் திடீரென மறைந்து விடுகின்றன. பிறந்த வீடுபோலல்ல புருஷன் வீடு. கணவனுடைய அன்பு, காதல் என்பதை அறியாத ஒரு பெண் கணவன் வீட்டுக்குப்போகத்தானேவிரும்புதல்அரிது.

இந்நாட்டில் மனைவிமார்கள் விவாக காலத்தில் பகுத்தறிவு அதிகமில்லாத குழந்தைகள். அக்குழந்தைகள் இதுவரையில் பாராத அந்நியர் வீட்டிற்குப் போய், இதுவரையில் பழகாத மனிதர்களுடன், இதுவரையில் அநுபவித்த சுதந்திரங்களை இழந்து வாசம் செய்வதென்றுல் அழாமல் என் செய்வார்கள்? ஆகாயத்தில் இஷ்டப்படி பறந்துவரும் குருவியைத் திடீரெனப் பிடித்... ...க்கால் அக்குருவி என் ...ற்குப் போன புதிதாயிருக் ...பிள்ளை ... உள்பட) ...பெண்களு... ...ஒன்றுமாரா... வந்த ... ...மே நாட்டுப்பெண் தலையில் வீட்டு ...ல சுமத்தப்படுகிறது. வேலை செய்யா ...டால் அன்றைய தினத்திலிருந்து ...தொல்லைகள் ஆரம்பித்துவிடும். இந்நிலைமை... வாழ்க்கை ஆரம்பிக்கும் ஒரு பெண் ...க்கு வாழ்வில் என்ன ஆற்றல் இருக்கும்? ...ந்த சிலநாட்களுக்குள் அவள் உள்ளம்வற்றி ...டல் வற்றி க்ஷயம் பிடித்து விடுகிருளெ ...னில் அதில் வியப்பென்ன? இப்பெண்ணைப் பற்றிப் புருஷன் யோக்யனுயிருந்தால் அவனுக்குக் கவலை அதிகமாகி விடுகிறது. இது பற்றித் தன் பெற்றோர்களிடம் புருஷன் பேச ஆரம்பத்தால் "வந்து,இன்னும்இரண்டு நாளாகவில்லை. அதற்குள் பெண்டாட்டிப் பித்துப் பிடித்துவிட்டதா" என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். மனைவியைப்பற்றிப் புருஷன் பகிரங்கமாகக் கவலைப்பட்டால் பெண்ணின் தொல்லைகள்பெருகும்.

பிறந்த வீட்டில் செல்வமாய் வளர்ந்த குழந்தை; காலையில் உணவருந்தி விட்டுப் பாட்டுப்பாடும்; திரும்பின போதெல்லாம் குழந்தை 'சமத்து' என்று மெச்சி முத்தமிடுவார்கள்; ஒழிந்த நேரத்தில் பக்கத்துவீட்டுப் பெண்களுடன் விளையாட்டு; பின்பு, கவலையில்லாமல் தூக்கம். பிறந்த வீட்டில் இப்படி வாழ்ந்த குழந்தைக்குக் கலியாணம் ஆயிற்றென்றுல் எல்லாம் மாறிவிடுகின்றன. புருஷன் வீட்டில் நான்கு பேர் பார்க்கும்படியாய் வெளியே வரக்கூடாது. ஒருவருடனும் பேசக்கூடாது. பிறந்த வீட்டிலிருந்து யாரேனும் வந்தாலும் முன்னுல் ஓடி வந்து வா என்று கூப்பிடக்கூடாது.புருஷன் இருக்கும் பக்கம் அணுகக்கூடாது. வீட்டில் விசேஷம் நடந்து மாமியாகப் பார்த்துப் பாடச் சொன்னுல்தான் பாடலாம். எல்லோரும் சாப்பிட்ட பிறகு சாப்பாடு. இதுதான் ஏறக்குறையஎல்லாக்குடும்பங்களிலும்மாமூல்

சில இடங்களில் நகரவாசிகள் இம்மாமூலை மாற்றி விட்டார்கள். ஆனல் நாட்டில் பெரும்பான்மையோர் குருவியைப் பிடித்துச் சிறையிலடைக்கும் பாவத்தைச் செய்தே வருகிருர்கள். இந்நிலைமை மாறவேண்டுமானுல் முதலில் புருஷன் சுதந்திர முள்ளவனு அல்லது பிறர் கையை எதிர்பார்ப்பவனு என்று பார்க்க வேண்டும். மணமகன் தன்னிஷ்டப்படி இல்லறம் நடத்த யோக்யதை உள்ளவனு யிருக்கவேண்டும். அவன் வீட்டுக்கு அவன மனைவி இராணியாயிருக்க வேண்டும். புருஷன் தன் வாழ் நாள் முழுவதும் சுகப்பட வேண்டுமானுல் அவன் மனைவி அவள் வாழ்க்கையில் முழு மனதுடன் ஈடுபடவேண்டும். அவள் இளம் பிராயத்திலே கண்ணீர்விடத் தொடங்கி விட்டால் புருஷன் 'முன்னுக்கு' வருதல் இல்லை. அவன் வீட்டில் லக்ஷ்மி தேவி காலெடுத்து வைக்கவும் மாட்டாள். ஆண் பிள்ளைகளுக்குத் தைரியம் வேண்டும். அவர்கள் சோர்ந்து விட்டால் வாழ்க்கை பாழாய் விடும்.

மருமகளைப் பலவந்தமாய் வேலை வாங்கலாமா?

குண்டூர் ஜில்லா கோர்ட்டு வக்கீல் ஒருவர் ...''னில் எழுதுகிருர் :—

... மரு... ...தம் செய்து வேலை ... அந்த மனிதன் பினல்கோட் 374 பாவுபடிக்குக் குற்றம் செய்தவனுகிருன். அந்தப் பிரிவுப் படிக்கு 1 வருஷம் சிக்ஷைக்குப் பாத்திரனுகிருன்.

மருமகளுடைய இஷ்டமில்லாமல் மாமியார் அவளை வேலை செய்யும்படி செய்தால், மாமியார் மீது மருமகள் இந்தப் பிரிவுப் படிக்கு வழக்குத் தொடரலாம். அதே மாதிரியாய் புருஷன் மீது பெண்ஜாதி வழக்குத் தொடரலாம். பலவந்தம் செய்வது நியாய விருத்தமாயிருந்தால் குற்றம் உண்டு. வீட்டில் செய்யவேண்டிய வேலைகள் நியாயமாயும், கிரமமாயும் இருக்கிறவரையில் இந்த நிர்ப்பந்தம் குற்றம் ஆகாது. நியாயம்- கிரமம் என்கிற சங்கதிகள் அந்தந்த வழக்குகளின் சந்தர்ப்பங்களைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியதாயிருக்கும். மருமகன் நோய்வாய்ப் பட்டிருக்கையில் வேலை செய்யும்படி செய்தால் இந்தப்பிரிவின்படி குற்றமேயாகும். மருமகள் அல்லது பெண்ஜாதி வீட்டு வேலை செய்கிறதில்லையென்று முரட்டுத்தனமாய் உட்காரும்போது பலவந்தம் செய்து வேலைவாங்கினுலும் இந்தப் பிரிவின் பிரகாரம் குற்றம் ஆகலாம். மருமகள் மீது அதிகாரம் செலுத்த மாமியாருக்காவது நாத்தனுருக்காவது சட்டப்படி அதிகாரம் கிடையாது. மருமகளை நல்லதனம் பண்ணிக்கொண்டு அவளுடைய சுமுகத்தைச் சம்பாதித்துக் கொண்டு மருமகளுடைய சக்திக்கு மிஞ்சாமல் நியாயமான வேலைகளை வாங்கிக்கொள்ளலாம்.

ஹிந்து குடும்பங்களில்மாமியார், நாத்தனுர், மாமனுர் இவர்கள்மருமகள்மீது எவ்விதமான அதிகாரமும் வஹிக்கலாகாது. இந்த சங்கதியை அவர்கள் தெரிந்துகொண்டால்குடும்பத்தில் கலகங்கள் நேரிடா. பெண்ஜாதி வேலை செய்யமாட்டேன் என்று சொல்லுகையில் ...க்குச் சக்தியிருந்தால் வேலைக்காரர் ... அவர்களுக்குச் சம்பளம் ...கவேண்டியது தான். ...ஆய் இல்லாவிட்டால் புருஷ... அவன் தானே ... வேலை செய்யவேண்டியது தான். ...ால் குடும்பத்தில் கலக ...மில்லாமல் நி... ...ய் கிருஹ கிருத்தியங்களை நடத்த... ...டுமானுல், பெண்ஜாதி விஷயத்தில் ...மாய், கொடுமையாய், நடந்துகொ... ...மையுடனும் பிரேமையுடனும் ... ...ம் புருஷன் நடந்து கொண்டா... ...ஜாதியானவள் வஞ்சனையில்லாமல் ...தயாயும் சந்தோஷமாயும் குடும்ப... ...ளைச் செய்வாள். பினல் கோட் 3... ...லை மாமிகள், மாமனுர்கள், நாத்தனு... புருஷர்கள் படித்து அறிவு அடைய... ...டும்.

"எங் இந்தியா" குறிப்புகள்

சகோதரி நிவேதிதையைப் பற்றிய தவறு

காந்தியடிகள் தமது சுயசரிதத்தில் சகோதரி நிவேதிதையைப் பற்றி எழுதியது குறித்து "வேதாந்த கேசரி"யில் வெளியான மறுப்பை சென்ற பால் ஒன்றில் நாம் வெளியிட்டிருந்தோம். அதே பொருள் தரும் குறிப்பு ஒன்றை "மாடர்ன் ரிவியூ" பத்திரிகையும் எழுதியிருந்தது. அக்குறிப்பை "எங் இந்தியா"வில் எடுத்துப்போட்டு அதன்மேல் அடிகள் எழுதியிருப்பதாவது:-

மிக மகிழ்ச்சியுடன் நான் இத்திருத்தத்தைப் பிரசுரிக்கிறேன். "மாடர்ன் ரிவியூ"வில் இக்குறிப்பைப் படிப்பதற்கு முன், சகோதரி நிவேதிதையை நான் பார்த்தது அவருடைய சொந்த வீட்டில் அல்ல என்று எனக்குத் தெரியாது. வாசகர்கள் என் குறைகளை உணர்ந்துகொள்ள வேண்டும். நான் படித்திருப்பது மிகக்கொஞ்சம். தற்காலத்தில் இந்தியாவின் மேன்மைக்குப் பெரிதும் காரணமாயிருந்த பெரியோர்களின் சரித்திரங்களைக் கூடப் படித்ததில்லை. ஆனால் இப்படி என் படிப்பு குறைவாயிருப்பதற்குக் காரணம் சோம்பேறித்தனம் அல்ல என்று எண்ணி ஆறுதல் அடைகிறேன். என் வாழ்க்கை, இளமைப் பருவத்திலிருந்து இடைவிடா முயற்சியுள்ள வாழ்க்கையாதலின் படிப்பதற்கு அதிகநேரம் கிடைக்கவில்லை. மொத்தத்தில் இதனால் நான் அடைந்தது லாபமா நஷ்டமா என்பது எனக்கு இன்றும் நிச்சயப் படவில்லை. வாரந்தோறும் நான் எழுதிவரும் சரிதத்தில் நான் பற்பல ஸ்திரீ புருஷர்களைப் பற்றிச் சொல்வதெல்லாம், உண்மைத் தேட்டத்தில் ஈடுபட்டிருக்கையில் அவ்வப்போது என் மனோநிலையை விளக்குவதற்காகவே யன்றி வேறில்லை. இதற்கு அவசியமில்லாத என் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், பிற மனிதர்களைப் பற்றிய குறிப்புகளையும், அவை சுவையளிக்கக் கூடுமாயினும் விட்டு விடுகிறேன். ஆதலின் நான் இக்கதையில் பிற மனிதர்களைப்பற்றி எழுதும் குறிப்புகளே எனது முடிவான மதிப்புரையென்றாவது, அல்லது உண்மை யென்றாவது வாசகர்கள் கொள்ளுதல் அம்மனிதர்களுக்கும் எனக்கும் அநீதி செய்வதாகும். பிறரைப்பற்றிய குறிப்புகள், அவ்வக்காலத்தில் என் மனதில் உண்டான எண்ணங்களை மட்டுமே சொல்வனவென்று கருதப்பட வேண்டும். சகோதரி நிவேதிதை, ஸ்வாமி விவேகானந்தர், மகரிஷி தேவேந்திரநாத் முதலியோரைப்பற்றி நான் சொல்லப் புகுந்தது, சத்தியத் தேட்டத்தில் அப்போது எனக்கிருந்த தாபத்தையும், தென்னாப்பிரிக்காவில் என் அரசியல் வேலையெல்லாம் அதில் ஒரு பகுதியே யென்பதையும் விளக்குவதற்கே யன்றி வேறில்லை. ஆதலின் "மாடர்ன் ரிவியூ" குறிப்பைப் படித்ததும் அதை மிக மகிழ்ச்சியுடன் திருத்தப் போட்டிருக்கிறேன்.

கலகம் நேர்ந்த பின்னரே கண் திறப்பதா?

சமூகத்தொண்டில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ நாதகர்ணி என்பார் மகாத்மாகாந்திக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர், தில்லியில் முன்னர் நடந்த ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை மகாநாட்டிலும் சரி, பம்பாயில் சமீபத்தில் முடிவான ஹிந்து-முஸ்லிம் ஒப்பந்தத்திலும் சரி, "தீண்டாதார்" எனப்படுவோரின் விஷயம் கவனிக்கப்படாதது குறித்துக் கண்டித்து, முஸ்லிம்களுக்குத் தனி உரிமைகளும் தனிப் பிரதிநிதித்துவமும் அவசியமானால் "தீண்டாதார்"ருக்கு அவை இன்னும் அதிக அவசியம் என்றும் குறிப்பிட்டு, மகாத்மாகாந்தி இவ்விஷயத்தில் அசிரத்தை காட்டுவதாகக் குறைகூறியிருக்கிறார். இக்கடிதத்திற்கு மகாத்மா "எங் இந்தியா"வில் விடை எழுதியுள்ளார். "தீண்டாதார்" விஷயம் மிக முக்கியமானதாயினும், தில்லி மகாநாடும் பம்பாய்க்கூட்டமும் ஹிந்து முஸ்லிம் பிரச்னைக்காகவே நடந்தபடியால் அவ்விடங்களில் இது விவாதத்துக்கு வந்திருக்க நியாயமில்லையென்று சொல்லிவிட்டு மேலும் மகாத்மா காந்தி எழுதுவதாவது:—

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையின்றிச் சுயராஜ்யம் இல்லையென்றால், தீண்டாமை விலக்கின்றிச் சுயராஜ்யம் இல்லவே இல்லை என்று அவர் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். அரசியல் அமைப்பில் அவர்களுடைய ஸ்தானத்தைப் பற்றி எனக்குக் கவலையேயில்லை. இத்தகைய செயற்கை ஆதரவுகள், ஹிந்துக்களுக்கு மனமில்லாவிட்டால், தூள் தூளாகிவிடும். தனித் தேர்தல் தொகுதிகளோ, தனி உரிமைகளோ கூடா என்பதற்கு நான் ஏற்கனவே கூறியுள்ள காரணங்கள் "தீண்டாதார்" விஷயத்திலும் பொருந்தும். தீண்டாமை விலக்கு எந்தகைய சட்டத்தினாலும் சித்தியாகாது. ஹிந்துக்களே இந்த அவமானத்தின் கொடுமையை உணர்ந்து தாங்களாகவே அதை நீக்க முன்வந்தால்தான் தீண்டாமை விலக்குச் சாத்தியம். இது தீண்டாதாருக்கு மற்றவர் செலுத்தவேண்டிய கடமையாகும்.

"தீண்டத் தகாதார்-தீண்டத் தக்கவர் கலகங்கள் நேர்ந்து நமது கண்களைத் திறக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டாம்" என்று மேற்படி கடிதத்தில் ஒரு பயங்கரமான வாக்கியம் காணப்படுகிறது. இதன் உண்மையை மறுக்க முடியாது. எனக்கும் காலஞ்சென்ற ஹரி நாராயண ஆப்தேக்கும் நடந்த ஒரு சம்பாஷணையை இவ்வாக்கியம் எனக்கு நினைவூட்டிற்று. ஆனவில் இந்திய ஊழியர் சங்கக் கட்டடத்தில் இச்சம்பாஷணை நடந்தது. பாதிரிகளைப் போல் ஒடுக்கப்பட்ட வகுப்பாரிடையே வேலைசெய்து அவர்களுக்குள் அமைதியின்மையைக் கிளப்புவதைக் காட்டிலும், மேல் வகுப்பாரெனப் படுவோரிடையே வேலை செய்து அக் கொடுமைகளை நீக்க வழி தேடலாகாதா என்று கேட்டேன். அப்போது நான் இவ் வேலைக்குப் புதியவன். தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் துன்பச் சுமை எவ்வளவு மகத்தானது என்பது எனக்குத் தெரியாது. எனவே, என்னை நானே மிகவும் முன் யோசனைக்காரன் என எண்ணிக்கொண்டு "தாழ்த்தப்பட்ட வகுப்பாரை நமக்கு விரோதமாகக் கிளப்பி விடுவீர்களா?" என்று கேட்டேன். உடனே அவர் ஆத்திரத்துடன் சொன்னதாவது:— "என்னால் முடியுமானால் இன்றே அவர்களை நம்மை எதிர்த்துக் கலகமாகக் கிளம்பச் செய்து நாமாகக்கொடாததை அவர்களே பிடுங்கிக்கொள்ளச் சொல்வேன்."

உலகில் சீர்திருத்தங்கள் பல, இரத்த வெள்ளம் ஓடிய பின்னரே ஏற்பட்டிருக்கின்றன. ஒடுக்கப் பட்டவர்களின் பொறுமையும் போய் விடும்படியான ஒரு நேரம் வருகிறது; அப்போது அவர்கள் துக்கத்தினாலும் கோபத்தினாலும் வெறிகொண்டவர்களாகி, கொடுங்கோலர்களைத் தொலைத்து, அக்கொடுங்கோலர்கள் செய்த தவறுகளையே தாங்களும் செய்கிறார்கள். ஆகையினால் தான், அப்போது ஹரிநாராயண ஆப்தேக்கு இருந்த ஆத்திரம் தற்போது எனக்கும் இருக்கிறதாயினும், நான் என்னுடைய வழியிலேயே இருவகை நம்பிக்கைகளுடன் வேலைசெய்து வருகிறேன். அந் நம்பிக்கைகளிலொன்று, 'உயர்சாதி' ஹிந்துக்கள் எனப்படுவோர், வெள்ளம் தலைக்கு மேற் போவதற்கு முன்பே கண்விழிக்கப் பெற்று, தாழ்த்தப்பட்ட வகுப்பார்க்கு நீதி செய்வார்களென்பது. மற்றொன்று, அப்படி அவர்கள் தங்கள் கடமையில் தவறிவிட்டாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பார் அவர்களை எதிர்த்துக் கலகமாய்க் கிளம்புவதை விட நல்ல முறையைக் கடைப்பிடித்து, தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்வதாலும் துன்பம் அநுபவிப்பதாலும் ஹிந்து மதத்துக்கே இழிவைத் தரும் உயர்சாதி ஹிந்துக்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என நிரூபித்து விடுவார்களென்பது. இதற்கிடையில், ஸ்ரீ நாதகர்ணியைப்போல் இவ்வநீதியை உணரும் ஒவ்வொரு ஹிந்துவும் அவர்களுடைய துயரங்களைத்தாமும் பகிர்ந்துகொண்டு தன்னையும் தீண்டாதவனாக்கிக் கொள்ள வேண்டியதை யல்லாமல் வேறு செய்வதற்கில்லை.

சென்னை அரசாங்கத்தின் உத்திரவு

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கதர்நிதிக்குப் பணங்கொடுக்கலாகாது என்று சென்னை அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருப்பதாக வெளியான செய்தியைப்பற்றி மகாத்மா காந்தி "எங்இந்தியா"வில் எழுதுவதின் சாரமாவது:—

மேற்படி செய்தி உண்மையானால் சென்னை அரசாங்கத்தின் உத்திரவு முற்றும் கோணல் புத்தியினாலேற்பட்டது என்று கூறுவேன். அஃது அரசாங்க ஊழியர்களின் சுதந்திரத்தில் அநீதியாகத் தலையிடுவதாகும். கதரையோ, சர்க்கா சங்கத்தையோ தாக்கும் உத்தேசத்துடன் செய்யப்பட்டதானால் இரண்டும் இதினின்று தப்பிப் பிழைக்கும் என்பதில் ஐயமில்லை. சர்க்கா சங்கம் காங்கிரஸினின்றும் பிரிக்கவிட வேண்டுமென்பது இதன் கருத்தானால் அதுவும் கைகூடப் போவதில்லை. சர்க்கா சங்கம் தான் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் ஓர் உறுப்பா யிருப்பது குறித்துப் பெருமை கொள்கிறது. மேற்படி சங்கம் தனது ஆதரவுக்குரியது என்று அப்பெரிய தேசிய ஸ்தாபனம் கருதும் வரையில்

நன்மொழிகள்

1. சிருட்டியில் காணப்படும் பலவகைச் சீவ வர்க்கங்களுக்கும் உயிர் சிறந்ததாகவும், அருமை யுள்ளதாகவும் காணப்படுகிறது. இவைகளுக்கு அச்சம், மடமை முதலியவை இயல்பாக உள்ளன அல்லவென்றும், உயிர்களினது உணர்ச்சி கலங்கின நிலைமையே காரணமாகும் என்றும் உயிர் வகைகளினது இலக்கணம் தெரிந்த ஆசிரியர்கள் கூறுகின்றனர். தன்னில் உயர்ந்தாரிடத்து அழுக்காறு அடைவதும், தன்னில் தாழ்ந்தாரிடத்துக் கொடுமொழி பேசுவதும் ஆகிய இவைகளெல்லாவற்றிற்கும் உணர்ச்சி கலங்கின நிலையே காரணமாகும். தேகங்களில் காணப்படும் நானாவித துன்பமிகுதிக்கும் அதுவே காரணம்.

* * *

2. மாயா தத்துவத்துள் உட்பட்டார் யாவராயினும், போர் விளைத்தல் அச்சங்காணுதல் அவாவுடைமை இவை முதலாய துர்க்குணங்கள் தேவர், மனிதர் இவர்களிடத்துங் காணப்படுவது நாம் எல்லோரும் அறிந்த விஷயமே. உண்மையை உண்மையாகவே காணமாட்டாத அறிவிலார்க்கு மேற்குறித்த சம்பவங்கள் சகஜமே. உயிர் வர்க்கங்களைத் தாக்கும் அநேக எதிர்ப்புகளில் மிகவும் கேவலமுடையது அச்சம் என்பதாகும்.

* * *

3. எதிர்காலத்தில் என்ன நேரிடுமோ என்ற அச்சம் ஒன்றும், புலன்களுக்கும் எட்டாத கடவுள் முதலிய தத்துவங்களினின்று வரும் அச்சம் ஒன்றும், நோய் காரணமாக வரும் அச்சம் ஒன்றும், மரணபயம் ஒன்றும், வறுமை, முதுமைப் பருவம் உலக நுகர்ச்சிகளுள் வரும் நட்டம் இவை முதலியவைகளெல்லாம் நடுக்குறச் செய்யும் அச்சத்தினது பெரும் பிரிவுகளாகும். மனிதனது மனதினின்றும் எழுந்த குற்றங்களே இவைகளுக்குக் காரணம். எந்த இதயத்தினிடத்து உண்மைப் பிரகாசமுண்டோ அவ்விடத்து அச்சம் காணுதல் இல்லை.

* * *

4. மனிதர் உலகத்தை இருவித வகுப்புகளாகப் பிரிக்கலாம். உலகம்நன்மை பயக்கும் என்னும் கொள்கையுடையவர் ஒரு சாரார். தீமை பயக்கும் என்னும் கொள்கையுடையவர் மற்றொரு சாரார். நன்மை பயக்கும் என்பார் மனச்சாந்தியும், உலக போகங்களில் இன்பமிகுதியும் அடைவர். தீமை எதிர்ப்படினும் அதுவும் ஒரு நன்மைக்கே என்று கருதும் வன்மை பெற்றவர்கள். உலகம் தீமை பயக்கும் என்பார்க்குத் தீமைகள் எதிர்ப்படின் மனப்பொறுமையின்றி துக்க மிகுதியுடன் அனுபவிப்பர். மனதினின்றும் எழுந்த தீயசிந்தனைகளே தேசத்தில் காணப்படும் துன்பமிகுதிகளுக்குக் காரணமாதல் உண்டு.

* * *

5. மனிதரது துன்பங்களுக்கு ஆண்டவன் காரணன் என்று சொல்பவர்பலர். இஃது ஆண்டவனது குணங்களில் பெருஞ் சிறப்பாகக்கொள்ளும் பேரருள், பெருங் கருணை முதலியஇலக்கணங்களுக்குப்பெருங் குற்றத்தை உண்டுபண்ணுவதாக முடியும். குற்றமாகக் காண்பதைக் குணமென்று கருதுவது ஆன்றோர் இயல்பு. கடவுளே நேர்நின்று துன்பம்தருவதாயிருக்கின்அத்துன்பம்கடைசியில் இன்பமயமாக முற்றிலும் மாறுதல் அடையும். இருபெருஞ் சமய குரவர்களான சுந்தரமூர்த்திகள், அப்பர் பெருமான் இவர்களுக்கு ஆண்டவன் ஈந்த கண்ணினை இழக்கச் செய்தல், சூலை நோய் அளித்தல் ஆன இத்துன்ப மிகுதிகள் இறுதியில் இன்பமுடையனவாதலே தக்க சான்றாகும். சீவன் முத்தர் நிலையில் இருக்கும் பெரியார்க்கே ஆண்டவன் நேர்நின்றுஎதையும் அருளுவன். கன்மவசப்பட்டார்க்குப் பிறவித் தொடர்ச்சியே துன்பங்களை உண்டுபண்ணுவிக்கும். ஆண்டவன் காரணன் அல்லர்.

* * *

6. நாசமுறும் பொருள்களிடத்து அதிக நம்பிக்கை வைத்தல் அறியாமை. நீண்ட சீவியத்தைத் தேடி நல்ல வாழ்க்கையை விரும்பாததும், தற்கால வாழ்க்கையினிடத்து முழு மனதையும் செலுத்தி வருங்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்தையற்றிருப்பதும் எல்லாம் அறியாமை.

* * *

7. காலத்தானும், இடத்தானும் பெரிதும் வேற்றுமைப்பட்ட பல சமய ஆசிரியர்கள் தாபித்தவற்றுள் சில உண்மைகள் எச்சமயத்தவரும் உவகையுடன் கொள்வதற்குப் பொதுவாகக் காணுமாயின், அவைகள் எத்துணைச் சிறப்புடையனவாகும் என்பது அறிஞர்கள் கவனிக்கத்தக்கது. உதாரணமாக சிறு பறவைகள் உணவுக்காகத் தங்கள் வாயினைத் திறப்பது போன்று, எல்லா மனிதர்களும் கடவுளைக் காண ஆசையுள்ளவர்களாய் இருக்கிறார்கள்" என்று கிரேக்க கவிஞர் ஹோமர் சொல்கிறார். இதே கருத்தினை இந்து சமய அறிஞர் "எப்படிச் சிறு பறவைகள் தாங்கள் வசிக்கும் மரத்தினிடத்து ஆசையுறுகின்றனவோ, அதுபோன்று எல்லா உலகங்களும் ஆண்டவனிடம் சமீபிக்கப் பிரயத்தனம் செய்கின்றன" என்கிறார். இவ்விருதரத்தினரின் கருத்து ஒற்றுமை கடவுளினது உண்மையைப் பலப்படுத்துவதாயிருப்பது கருதத்தக்கது.

* * *

8. துன்ப உலகத்தினின்றும் தப்பித்துக் கொள்வதற்குக் கடவுள் உணர்ச்சி அவசியம். "தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி, முனிவிலாததோர் பொருளது கருதலும்" என்னும் திருவாசக அடிகள் கவனிக்கத்தக்கன. பெரியவடிவினையுடைய கடவுளை நம்முடைய இதயத்தில் ஊன்றி அழுந்த வைப்பதே துன்பநீக்கமாகும். நன்றியறிதல், கீழ்ப்படிதல், அன்பு இவைகள் ஆரம்ப முறையில் மக்களாயினோர்க்கெல்லாம் அவசியம் இருத்தல் வேண்டும். இவைகளினது பரிபூரணமே தியானமாகமாறி ஆண்டவனைச் சமீபிக்கச் செய்யும்.

* * *

9. ஆண்டவனிடத்துக் காட்டும் நம்பிக்கை மிகவும் மேலானது. அத்துணை அளவாக மனிதரிடத்தில் வைப்பது சிறந்ததன்று. இவ்வுலகத்தில் தலையன்பிற்குச் சிறந்தவர்களாக மதிக்கப்படும் நம்மை ஈன்ற பெற்றவர்களையே அயலாராகக் கருதுவதற்கு இடமுண்டு. காலாந்தியத்தில் இவர்களும் நீங்குபவராதல் உண்மையாதலின் அயலாராகக் கருதுவது பொருத்தமே. "உற்றாரை யான் வேண்டேன்" என்ற வாதவூரடிகள் திருவாக்கானும் "உன்பற்றொழிய ஒருபற்றுமில்லை" என்ற பட்டினத்தடிகள் திருவாக்கானும் உணர்க.

* * *

10. அதிக சுகங்களையும், நன்மைகளையும் அநுபவிக்கிற சில மனிதர்களைப் பார்த்து அவைகளை அநுபவியாத பிறர் அவர்களுக்குக் கௌரவமும், புகழும் அளிக்கிறார்கள். அநுபவிக்கிற சுகங்கள் காலக்கிரமத்தில் மறையுமாயின், அநுபவித்தாரது நிலைமை மிகவும் தாழ்ந்ததாகக் காணப்படும். இதைத் தீர யோசிக்குமிடத்து ஒன்றும் இல்லாதிருப்பதே அதிக நன்மையெனப்புலப்படுமன்றோ? ஏனெனில் கவலையும் துக்கமும் வருவதற்கு ஏதுவில்லை. தன்னையே தேற்றியிருந்த சந்தோஷத்தைத் தனக்குள் உண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

* * *

11. உலக வாழ்வினின்றும் தோன்றிய பற்றுக்களை விடுவது மாந்தர்களுக்கு எளிதில் வாய்க்கத்தன்று. மனந்திடப்பட்டாலன்றி பற்றுகள் விடப்படுவதில்லை. வாழ்வு என்பன-குலம், இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் என்னும் இவை என்றார் செந்தமிழ்க் கடல் ஆசிரியர் சிவஞானசுவாமிகள். இறைவனது ஆழ்ந்த பத்தியில் தலை நின்றார்க்கே எத்தகைய வாழ்வினிடத்தும் வெறுப்புத்தோன்றுமேயொழியப்பிறர்க்குத் தோன்றாது. அரச வாழ்வினும் பெரிதாக அதி பெருஞ் சிறப்பினோடு வாழ்ந்த பட்டினத்தடிகள், வாழ்வு அனைத்தையும் துச்சமென ஒதுக்கிச் சைவ சித்தாந்த செந்நெறியாகிய அழியாச் செல்வத்தில் கழிபேருவகையுடன் நின்று உலாவின சரித்திரமே மெய்ப்பிக்கும்.

அ. குமாரசாமி முதலியார்,
காந்தி ஆபீஸ், சென்னை.

காங்கிரஸ் கொடியின்கீழ் வேலைசெய்வதைச் சர்க்கா சங்கம் ஒரு பெருங் கௌரவமாகக் கருதும். ஒரு ஸ்தாபனம் காங்கிரஸிலிருந்து தோன்றிய காரணத்தாலும், காங்கிரஸின் ஆதரவைப் பெற்றிருக்குங் காரணத்தினாலுமே அரசியல் ஸ்தாபனம் ஆகிவிடுமானால், இத்தகைய வியாக்யானத்தின் விளைவுகள் மிகக் கேடாகும். சுயமரியாதையுள்ள எந்த அரசாங்க ஊழியரும் அவற்றைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. காங்கிரஸ் ஆதரவில் ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்காக நடக்கும் பள்ளிக்கூடங்கள், கஷ்ட நிவாரண வேலைகள், தர்ம வைத்தியசாலைகள் இவைகளெல்லாம் அரசியல் அமைப்புகள் ஆகிவிடுமா? தற்போது காங்கிரஸ் காரருக்குக் கதரணிதல் கட்டாயமாக ஏற்பட்டிருக்கிறது. இதனால் அரசாங்க ஊழியர்கள் கதரணிதல் குற்றமென்று ஏற்படுமா? இம்மகாகொடிய உத்தரவை மீறி நடப்பதற்குத் துணிவுள்ள அரசாங்க ஊழியர்கள் இருப்பார்களென்று நம்புகிறேன். சர்க்கா சங்கத்தை அரசியல் சங்கமென்று அரசாங்கம் உத்திரவு போட்டாலும், அது அரசியல் சம்பந்தம் அறவே இல்லாத ஸ்தாபனம் என்று உறுதி கூறுவேன். காங்கிரஸ் மகாசபை மேற்படி சங்கத்தை அமைக்குங்கால் செய்த தீர்மானத்திலேயே "அரசியல், அரசியல் மாறுதல்கள், அரசியல் ஸ்தாபனங்கள் இவற்றினால் பாதிக்கப்படாத நிரந்தர சங்கம்" என்று கண்டிருக்கிறது. இதை அரசியல் சங்கம் என்று எப்படிச்சொல்லலாமோ விளங்கவில்லை. ஆனால் அரசாங்கங்களின் செயல்கள் பல விளங்கக்கூடாததாயிருத்தல் சகஜம். கிராமங்களில் இராட்டை பரவுவதையும், கதர் அபிவிருத்தியடைவதையும் தான் விரும்பவில்லையென்ற காரணத்தைக்கூறிச் சென்னை அரசாங்கம் இத்தகைய உத்தரவைப்போட்டிருக்கால் இதைவிடக் கண்யமாயிருந்திருக்கும்.

Printed and Published by T. V. Kalyanasundaran (Editor) at the Sadhu Press, 12-Ganapathi Mudali St., Royapettah, Madras.

END OF
ISSUE